. M. 2210

வருஷ சந்தா ரூ. 1-8-0

Editoress & Proprietrix } வை. மு. கோதைநாயகி அம்மாள்.
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR)

ஜகன்மோகினி

மலர் 10 | 1933 ஸெப்டம்பர் | இதழ் 6

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 AUG 1933
MADRAS

தபாற் செலவு இனாம்

சந்தா நேயர்களுக்கு விலை ரூ. 1—4—0

தனிப் பிரதி விலை, உள் நாடு, அணா 2 வெளி நாடு, அணா 3

JL
N33.106.
2100

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
...த் தெரு, திருவல்லிகேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதியில் சஞ்சிகை வெளியாகும்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் வாங்கு[illegible]
களுக்குக் குறைந்த விலை.

சோதனையின் கொடுமை கதம்பமாலை	ரூ. 2—0—0
பரிமளகேசவன் மூன்று வைரங்கள் உத்தமசீலன்	ரூ. 1—8—0
ஸாரமதி நளினசேகரன்	ரூ. 1—8—0

உடனே முன் பணமனுப்பிப் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பரிசுகளின் விவரம்

இம்மாதம் 25-தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்:—

பரிசு நெ. ரூ.—சந்தா நெ.

J. 49. Mr. A. V. Jayaramachandra Iyer, Ambur.

S. 205. Mr. B. K. Swamy, Colombo.

மகான் அரவிந்தர்

மனைவியாருக்கு எழுதிய கடிதம்

புதுச்சேரியில் தவராஜ யோகியாக விளங்கும் மகான் அரவிந்த கோஷ் சுமார் இருபதாண்டுகளுக்கு முன் தமது மனைவியாருக்கு எழுதிய அரிய கடிதம் இந்நூலில் அடங்கியிருக்கிறது. இதில் அரவிந்தர் பெருமை, அவரது அற்புத தேசபக்தி, சிறந்த தெய்வ பக்தி, மாதர் கடமை யாதியன விளங்கும். சிறந்த காகிதத்தில் பெரிய கொட்டை யெழுத்துக்களில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. இரண்டணாத் தபால் தலை அனுப்புவோருக்கு ஒரு பிரதி அனுப்பப்படும்.

"லோகோபகாரி" பத்திரிகாலயம்,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

26 AUG 1933

சோமு :—அக்கா ! என்ன விஷயம். ஏன் திட்டுகிறுய் ! திலகம் ! ஏனம்மா ஏதோ ஒருவாறு இருக்கிறுய் ?

அங்க :—ஏண்டீ ! நான் கேட்பது உனக்குக் காதில் விழவில்லையா ! எதையோ நீ வீசி எறிந்தாய் ! அதை எவனே ஒரு தடியன் எடுத்துக்கொண்டு போனுனே ! அது என்னவென்று சொல்லாவிடில் நீ செய்த காரியம் மறைந்து போய்விடும் என்று எண்ணுதே ! அதை உன் வாயினுலேயே வரவழைக்காது விடப்போவதில்லை. பரம சாதுவைப்போல விழிக்கின்றுயே !

திலக :—மாமீ ! வீதியில் வீசி எறிவதற்கு எனக்கு என்ன இருக்கிறது. நான் எதைச் சொல்லியபோதிலும் நீங்கள் அதை நம்பமாட்டீர்கள். இந்த அறையைப் பெருக்கினேன். குப்பையை ஒரு காகிதத்தில் சுற்றி வைத்தேன் ; மறந்து போய் வேறு வேலைக்குப் போய்விட்டேன். இப்போது இங்கு வந்து பார்க்கையில் குப்பை யிருந்தது. இதைத் தாங்கள் கண்டால் திட்டப் போகிறீர்களே என்று அதை இங்கிருந்தே வீசி எறிந்தேன். வேறு எதுவும் இல்லை.

அங்க :—ஓகோ ! குப்பையை நீ வீசி;எறிந்தாய் ; உன் குப்பையைப் பொறுக்க வீதியில் ஒருவன் காத்திருந்து பொறுக்கிக்கொண்டானே ! அடீ சாகஸக் கள்ளீ ! இந்த தந்திரமெல்லாம் யாரிடம் பலிக்குமென்று நினைத்தாய்?

சோமு :—அக்கா ! நான் சில நாளாகவே பார்த்துக்கொண்டிருக்கிறேன். இந்த தெருவில் அதிலும் இவ்வீட்டு வாசலில் ஒரு மனிதன் வட்டமிட்டுக் கொண்டிருக்கிறுன். அவன் யாரோ, என்னவோ என்று நான் நினைத்திருந்தேன். நீ இப்போது சொல்வதிலிருந்து அவன் யாரோ உளவறிந்த கள்வன் என்றுதான் தோன்று

ஒரு விஷயத்தைப் பற்றி நாம் "அப்படிச் செய்யலாமா! இப்படிச் செய்யலாமா?" என்று யோசனை செய்ய, அந்த யோசனையிலேயே சில நாட்கள் சென்று மறைய, திடீரென்று ஓர் புதிய விஷயம் உதயமாக 5 நிமிடத்தில் அதைச் செய்துவிட நேருகின்றது. இந்த விதமே பல காரியத்திலும் அனுபவமாகின்றது.

 210042

கின்றது. திலகவதி! உண்மையைக் கூறி விடு. இந்த அம்மாளிடம் நீ பொய்யுரைத்துத் தப்பித்துக்கொள்ள முடியாது.

திலக:—நான் உண்மையையே உரைத்தேனே யல்லாது பொய்யுரைக்கவில்லை—என்று, என்றுமில்லாத தைரியத்தோடு கூறி அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு நேரே சமயல் கட்டிற்குப் போய் விட்டாள். இன்று புதிதாக உண்டாகிய இந்த துணிகரமான செய்கையைக் கண்டு அங்கச்சியம்மாளுக்கு ஆத்திரம் பொங்கியது. எனினும் தான் அப்போது குடுகுடுப்பாண்டியின் வீட்டிற்கு அவசரமாகப் போகவேண்டு மாதலால் அந்த விஷயத்தைப் பற்றி அதற்கு மேல் எதுவும் பேசாமல் தம்பியுடன் போய்விட்டாள்.

சுமார் இரண்டாயிரம் ரூபாய் வரையில் புதையல் எடுக்கும் தினத்தில் செலவாகுமென்றும், அதற்கு முன்பு ஒரு ஆயிரம் ஆகும் என்றும், ஆக மூவாயிரம் ரூபாயிக்கு ஜாபிதாக்கள் விவரமாக குடுகுடுப்பாண்டி கொடுத்துவிட்டான். அதைப் பெற்றுக் கொண்டு அங்கச்சியம்மாள் வீட்டிற்கு வந்துவிட்டாள். தான் ஒரே நெட்டாக மூவாயிரம் ரூபாய் எவ்விதம் சேகரிப்பது என்று ஏங்கித் தம்பியுடன் யோசித்தாள். சோமுவும் வெகு சாமர்த்தியமாய் யோசனை செய்து அங்கச்சியம்மாளின் காதோடு ரகஸியமாய் சில விஷயங்களைக் கூறினான். இதைக் கேட்ட அங்கச்சியம்மாள் அளப்பரிய சந்தோஷத்தை யடைந்து, அவனைத் தட்டிக் கொடுத்தாள். இருவர் முகத்திலும் வெற்றி கண்டுவிட்ட தேஜஸ்—சந்தோஷம்—ஜொலித்தது.

திலகவதி எறிந்த கடிதத்தைப் பெற்றுக்கொண்ட சுகுமாரன் அதில் என்ன விஷயம் இருக்குமோ என்று எண்ணியவாறே அதைத் தன் வீட்டிற்குக் கொண்டுபோய்ப் படித்தான். அது பின் வருமாறு இருந்தது.

வீட்டில் சமையற்காரன் சாப்பிட்ட மிகுதிதான் முதலாளிக்கு; கோயிலில் மடப்பள்ளிப் பெருச்சாளிகள் உண்ட மிகுதிதான் கடவுளுக்கு; தோட்டத்தில் புஷ்பிக்கும் புஷ்பங்களும், பழுக்கும் பழங்களும் தோட்டக்காரன் அனுபவித்த பிறகே எஜமானனுக்கு; கடையில் விற்கும் நகைகள்

என் இன்ப வடிவத்திற்கு நமஸ்காரம்.

தங்கள் கடிதங் கண்டு களிப்பும், தவிப்பும் கொண்டேன். தங்களுடைய நிலைமை எவ்விதமிருக்கிறது என்பதை நான் நன்கறிவேன். மகா கொடிய பாவியான என் பொருட்டு நீங்கள் உலகை விட்டு மறைவதாக எழுதி இருப்பதைக் காண என் ஆவி துடிக்கின்றது. அத்தகைய எண்ணமே வேண்டுவதில்லை அதை விட்டு விடுங்கள். நான் தங்களை அடிக்கடி சந்திக்க முயற்சிக்கிறேன். ஓர் முக்யமான விஷயத்தைத் தங்களிடம் கூறவேண்டி இருப்பது பற்றி நானே தங்களைப் பார்க்க நினைத்தேன். எந்த விதமாகவேனும் நாளைக்குள் தங்களை நேரில் பார்க்கிறேன். சகலமும் பேசிக்கொள்ளலாம். நான் ஒவ்வொரு நிமிடத்திலும் அபாயத்திலிருக்கிறேன் என்பதை மட்டும் தெரிவிக்கின்றேன். கவலைப் படவேண்டாம்.

இங்ஙனம்
தங்கள் அடிமை......

அதைப் படித்ததும் அவனுக்குப் பேரானந்தமாகிவிட்டது. எனினும் "ஆபத்தில் சிக்கி இருப்பதாக எழுதியுள்ளது யாதாகவிருக்கும்?" என்று சிந்தித்தான். மறுநாளைக்குள் தன்னைத் தன் கண்மணி எவ்விதம் சந்திக்கப்போகிறாள் என்று அதே சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான். மறு தினம் மாலை 7 மணி இருக்கும். சுகுமாரன் பிள்ளையார் கோயிலில் நின்றுகொண்டிருந்தான். அச்சமயம் வெகு பரபரப்புடன் நமது திலகவதி வீட்டை விட்டு இறங்கினாள். சுகுமாரன் அங்கிருப்பதைக்கூட கவனிக்கவில்லை; நேரே நடக்கவாரம்பித்தாள். திலகவதியை அங்கச்சியம்மாளே வீதிவரையில் அனுப்பி விட்டு உள்ளே சென்றாள்.

இதனால் அவளை அங்கச்சியம்மாளே அனுப்பியதாகத் தெரிந்து கொண்ட சுகுமாரன் திலகவதி எங்கு செல்கிறாள் என்று பின்னு

கடைக்காரனின் மனைவியோ, வைப்பாட்டியோ அணிந்த பிறகே வாங்கு பவர்க்கு; அச்சாபீஸில் போடும் புத்தகங்கள் அங்குள்ளவர்கள் படித்த பிறகே சொந்தக்காரருக்குக் கிடைக்கின்றன. இவ்விதம் உலகில் பல உள.

லேயே தொடர்ந்து சென்றான். திலகவதி நேரே தன் வீட்டிற்குச் சென்றதைக் கண்டு அபாரமான சந்தோஷங் கொண்டு வெகு வேகமாக நடந்து தானும் வீட்டையடைந்தான். திலகவதி முதல் கட்டை அடைந்ததும் வேலைக்காரன் "பெரியம்மா. இல்லீங்க. ஊருக்குப் போயிருக்கிறாங்க." என்றான். உடனே திலகவதி "ஐயா கூட இல்லையா?" என்றதும் "மெத்தைமேல் போய்ப் பாருங்கள்" என்றான். திலகவதி வெகு வேகமாக மெத்தை மீது ஏறினாள்.

அதே சமயம் சுகுமாரனும் வீட்டை யடைந்து திலகவதி மெத்தைக்குப் போவதை யறிந்து அங்கு சென்று "கண்மணீ! திலகவதீ!" என்று கூறிக்கொண்டே அவனுடைய அபாரமான காதலை வெளியிடுவது போலத் திலகவதியைக் கட்டிக்கொண்டு "பயப்படாதே! உன்னை நான் உன் வீட்டிலிருந்தே தொடர்ந்து வருகிறேன். உன் கடிதத்தில் எழுதியதுபோல என்னைக் களிக்கச் செய்ய வந்ததற்காக மிக்க சந்தோஷமடைகின்றேன். உன்னை உன் எஜமானியம்மாளே வீதிவரையில் வழியனுப்பியது ரிரம்ப ஆச்சரியமாக விருக்கிறதே! என்ன விசேஷம்?" என்றாள்.

திலக:—நீங்கள் அசப்பில் வந்து இவ்விதம் செய்வது எனக்கு நடுக்கலை யுண்டாக்கிவிட்டது. என் அன்பரே! உங்கள் கடிதம் என்னுயிரைத் துளைக்கும் ஓர் பாணமாக விருந்தது. அதைக் கண்டவுடன் நான் எப்படியும் தங்களைச் சந்திக்க நினைத்தேன். என்னுடைய நற்காலமோ, தங்களுடைய ஆவலின் பலனோ என்னை என் எஜமானியம்மாளே ஒரு காரியமாக அடுத்த தெருவுக்கு அனுப்பினாள். வழியில் தங்களைப் பார்த்துவிட்டுச் செல்ல வந்தேன். என்னை வேறு ஒரு எமனுக்குத் தள்ளப்போவதாக என் எஜமானியம்மாள் நிச்சயம் செய்திருக்கிறாள். அந்த செய்தியைக் குறித்தே நான் ஆபத்தில் இருப்பதாக எழுதினேன். ஆதலால் நீங்கள் வீணுகக் கிட்டாத விஷயத்தில் கஷ்டப்படுவது எதற்கு என்றுதான் நான் நினைக்கி

கந்தன்:—(நாடகம் பார்த்துக்கொண்டே) ஏண்டி நாடகக்காரனையும் என்னையும் உற்று உற்றுப் பார்த்து உன் ஜாதி புத்தியைக் காட்டுகிறாய்?

தாசி:—உங்களை விட அவன் அழகா! அவனை விட நீங்கள் அழகா என்று பார்க்கிறேன். வீட்டுக்குப் போகையில் என்னைத் தேடவேண்டாம்.

றேன். என் மானஸீகமாக தங்களுக்குக் கொடுத்துவிட்ட இந்த சடலத்தை அந்த அன்னியனுக்கு அரை விநாடியும் கொடுக்கப்போவதில்லை. இது சத்தியந்தான். எனது விதி என்னை அவனிடமேதான் தள்ளப்போகின்றது. அதன் மூலம் என்னுயிரை நீக்கிக்கொள்ள நற்காலம் பிறக்கும். இனி என்னுடைய பிறவியில் மிகுதியுள்ளது இதுதான்.

சுகு:—என்ன! என்ன! உன்னுடைய மானஸீகமாக நீ எனக்கு உன்னை தத்தம் செய்துவிட்டபிறகு உன்னுடைய இடரைக்கொய்து உன்னைக் காப்பாற்றி, நான் உன்னை அடையும் உரிமையைப் பெற வேண்டுவது என் கடமையல்லவா! கண்ணே! கவலைப்படாதே! உன்னை நான் என்னுயிருடன் அன்னியன் வசமாக்க மாட்டேன்; இது சத்தியம். அடிக்கடி நாம் சந்திக்கும் மார்க்கம் மட்டும் நீ செய்துவிட்டால் போதும்.

தில:—ஐயோ! நான் எவ்விதம் மார்க்கம் செய்வது, பகிரங்கமான எக்காரியத்திற்கும் ஆபத்து இல்லை. தெய்வீகக் காதலுடன் சந்திப்பதாயினும் இத்தகைய விதமான செய்கை பேராபத்திற்கு இடமாகும். ஆதலால் தாங்கள் தங்கள் முயற்சியினால்—என் மீதுள்ள கரை கடந்த காதலால்—உங்கள் சொந்தமான ப்ரயாசையுடன்; என் விலங்கையறுத்து, விடுதலை செய்து, என்னைக் காப்பாற்றினால் ஒருகால் ஜெயம் பெறலாமேயன்றி வேறு வழி இல்லை. நான் சென்று வருகிறேன். இதனால் மனத்தளர்ச்சி யடைய வேண்டாம். என்னுடைய சகலமான அபிப்ராயத்தையும், ஆபத்தையும் உரைத்து விட்டேன்.—என்று கூறிப் பின்னர் போகக் கிளம்பினாள்.

சுகு:—கண்மணீ! நீ மகா புத்திசாலி என்பதை நான் பல முறை அறிந்துள்ளேன். இப்போது உன்னுடைய அபாரமான

வினா:—புதிய புத்தகம் வந்திருக்கிறதாமே! ஏன் எனக்குச் சொல்லவில்லை?

விடை:—நீ பணங் கொடுத்து வாங்கி என்னை யாதரிப்பாய் என்று ஏமாந்து முன்பு உன்னிடம் சொன்னேன். உன் செய்தி யறிந்த பிறகுமா சொல்வேன். உன் வழி தெரிந்துவிட்டது. என் வழியும் உனக்குத் தெரிந்தது.

புத்தியுடன் உரைத்த ஆணித்திறமான வார்த்தைக்கு அங்கம் பூரிக்கின்றேன். நான் சுத்த வீரனுக—சாரணர் படையில் ப்ரக்யாதி பெற்ற உண்மை வீரனுக—இருப்பின் உன்னுடைய இடரைத் தீர்த்து உன்னைக் களிப்போடு கைப்பற்றுகிறேன். இல்லையேல் இந்த உயிரை மாய்த்துக் கொள்ளுகிறேன். இதே வார்த்தையை நான் இதுவரையில் பல முறைகளில் சொல்லி இருக்கிறேன். இன்று கூறுவதே கடைசியாகும். கண்ணே! திலகவதி! நாம் இருவரும் பாக்ய சாலிகளா, அல்லவா! என்கிற பெரும் ப்ரச்னை நம்மிருவருக்கும் மத்தியில் இருக்கின்றது. அது எவ்விதமான பலனளிக்குமோ தெரியாது

திலக:—ஆ! நேரமாகிவிட்டது. கால் மணி நேரந்தான் எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆதலால் நான் சென்று வருகிறேன். இனிமேல் என்னைக் காணவில்லை என்கிற ஏக்கம் வேண்டாம். என் னிலைமையை அறிந்து என்னைக் காப்பது உங்கள் கடன் என்று நானும் இக்கிமிடம் முதல் தங்கள் மீது சுமையைச் செலுத்தி விட்டேன். எப்படியேனும் சந்திக்க வழி செய்ய எத்தனிக்கிறேன். நான் சென்று வரட்டுமா!—என்று கூறிக்கொண்டே எழுந்தாள்.

சுகுமாரனும் வெகு சந்தோஷத்துடன் அவளை விடை கொடுத்தனுப்பினன். திலகவதி நேரே தான் செல்ல வேண்டிய இடத்திற்குச் சென்று கடிதத்தைக் கொடுத்தாள். பதில் பெற்றுக்கொண்டு விரைக்க விரைக்க வீடு வந்து சேர்ந்தாள். இவள் வரவையே வெகு ஆவலோடு எதிர்பார்த்திருந்த அங்கச்சியம்மான் வெகு சந்தோஷத்துடன் எதிர் வந்து "ஏண்டீ! கொண்டு கொடுத்தாயா! மாமா இருந்தாரா!" என்றாள்.

திலகவதி தான் பெற்று வந்த பதிலை அங்கச்சியம்மாளின் கையில் கொடுத்தாள். அங்கச்சியம்மாள் அதை வாங்கிப் பார்த்

வினு:—என்னப்பா! அங்கு குபீர் என்று புகை கிளம்புகின்றதே! எங்கேனும் பற்றிக் கொண்டதா என்ன!

விடை:—அங்கு சில புண்ணியாத்மாக்கள் ஹோமம் செய்வதில் பந்தயப் போட்டி நடத்துகிறார்கள்; அவற்றின் (பீடி, சிகரெட்டு, சுருட்டு) புகை அண்டத்தை யளாவுகின்றது. கடவுள் பிரத்யக்ஷந்தான் பாக்கி.

தாள். அதில் ஒரு கடிதமும் மூன்று நூறு ரூபாய் நோட்டுக்களும் இருந்தன. வெகு சந்தோஷத்துடன் அவற்றைக் கொண்டு பெட்டியில் வைத்தாள்.

இவ்விதமே அடிக்கடி திலகவதியின் மூலம் அங்கச்சியம்மாள் சிலருக்குக் கடிதமனுப்பி வந்தாள். அந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் திலகவதி சுகுமாரனைச் சந்தித்து வந்தாள். அந்த வீட்டுப் பின்புறத் தோட்டத்திலும் சுகுமாரன் திலகவதியைச் சில சமயம் சந்திக்கலானான். இவ்விதமே இவர்களுடைய சந்திப்பும் பலப்பட்டது. திலகவதியைப்பற்றி விசாரித்து ஆராய்வதையே சுகுமாரன் ஓர் விருதமாகக் கொண்டான். இவ்விதமே சில வாரங்கள் கடந்தன.

இத்தனை நாளாகப் பாரிச வாயுவுடன் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்த கிழவிக்கு (திலகவதியின் பாட்டி) திடீரென்று வலிப்பு மாதிரி இழுத்தது; உடனே அவள் உயிர் நீத்துவிட்டாள். அவள் மிகவும் உபயோகமற்ற கிழவியாக விருந்தபோதிலும் திலகவதிக்கு தனக்கென ஓர் கிழக்கட்டையேனும் சொந்தமாகவிருந்ததே! அதுவும் போய்விட்டதே! என்று விசனமாகவே இருந்தது. கிழவியின் உயிர் போய்விட்ட பிறகும் பிணத்தருகில் திலகவதியைத் தவிர வேறு யாரும் இல்லை. திக்கு திக்கென்று பயமாகவிருந்தது.

பிணந்தூக்கிகள் பிணத்தைக் கழுவி வேறு உடை யணிவிக்கும்படி திலகவதிக்குக் கட்டளையிட்டார்கள். திலகவதி பயந்தவாறு வேலைக்காரியை உதவிக்குக் கொண்டு மேல்படி காரியத்தைச் செய்தாள். அப்போது கிழவியின் இடுப்பில் ஓர் கயிற்றில் சிறிய தாயித்து ஒன்றும், ஒரு சாவி ஒன்றும் கட்டியிருந்தன. இந்த கிழவிக்குச் சாவி எதற்கு? பெட்டியே இல்லாத இவளிடத்தில் சாவி வரவேண்டிய காரணம் என்ன! அதிலும் பெரிய சாவியாக விருக்

வினா:—இப்போதுதான் உங்கள் மகன் ஜெயிலிலிருந்து வந்ததாகக் கூறினீர்களே! ஐயோ! எந்த குற்றத்திற்காகத் தண்டனை யடைந்தார்? கொலையா! களவா!

விடை:—ஐயோ! அப்படிப்பட்ட ஆபத்தொன்றுமில்லை. அவனுக்கு ஜெயிலில் உத்யோகம், மாதம் 100 ரூபாய் சம்பளம்.

கிறதே!'' என்று திலகவதி யோசனை செய்தாள். அருகிலிருந்த வேலைக் காரியைக் கேட்டாள்.

"அம்மா! இந்த கெயிவிக்கு மொதமொதல்லே காக்கா வலி வந்திச்சாம். அப்படி வர்ற நோவுக்கு ஏதாச்சும் இரும்பு கையிலே கொடுக்கர வயக்கமாம். அந்த மாதிரி இந்த சாவியெ எப்போதும் கையிலெ வச்சி வப்பாங்களாம். ஒனக்கு 10 வயசு ஆறெப்போதுகூட இந்தம்மா நல்லாந்தாங்களாம். அப்பறம்தான் இந்த வாயுவு வந்து உயிந்து பூட்டாங்களாம். அப்போ வச்ச சாவியெ யாரு எடுத்தாங்க? அப்பிடியே கெடக்குது. இத்தினீ நாளா நானு பாத்துகினுதான் கிறேன். நீ பாக்கலையா?'' என்றாள்.

இதுகேட்ட திலகவதி "நான் பார்க்கவில்லையம்மா; இந்த அம்மாள் மெல்ல தானே ஒரு கையினால் துணி உடுத்திக்கொண்டிருந்தமையினால் நான் கவனிக்கவில்லை. என் பூர்வீகம் எனக்கு இன்னதென்று தெரியாவிடினும் இந்த ஒரு உபயோகமற்ற சாவியாவது எனது பெரியோர்களின் அடையாளமாக இருக்கும் பொருட்டுத் தான் கடவுள் கிழவிக்குக் காக்காய் வலியை வருவித்து இதைக் கொடுத்தார் போலும்.'' என்று கூறி, அந்த சாவியைத் தன் மடியில் சொருகிக் கொண்டாள். தாயித்தையும் பத்திரமாகவே வைத்துக் கொண்டாள். பிறகு பிணத்தின் வேலை முடிந்து, க்ரியைகளும் நடந்தேறி விட்டன.

திலகவதி தான் ஒரு விதமான ஆதாரவுமற்ற ஓர் தனிக் கட்டை—அனாதைப் பக்ஷி—என்பதை எண்ணி மிகவும் அலறினாள். தான் புத்தி தெரிந்த பிறகு தன் பூர்வோத்திரத்தை இக்கிழவியிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதற்கு முடியாமல் அந்த கிழவிக்கு வாய்

வினா:—கோயிலுக்குப் பக்கத்துத் தெரு என்று கூறி என்னை இத்துணை தூரம் அலைய வைத்தாயே! இது சரியா?

விடை:—வயித்தியர் உன்னை நடக்க வேண்டுமென்று சொல்லியும் நீ சோம்பலாயிருந்தமையினால் உன்னுடைய ஆரோக்கியத்தைக் கருதியே உன்னை நடக்கச் செய்தேன்.

குழறிவிட வேண்டுமா! மூளை கலங்கி விட வேண்டுமா! எல்லாம் நான் செய்த பாவந்தான். இந்த கிழவி எனக்கு எந்த விதம் பாட்டியாக வேண்டும் என்பதும் தெரியாத அனாதையாகி விட்டேனே! என்று, அன்று முற்றும் மிக்க துயரடைந்து புலம்பிக்கொண்டு பின்பக்கமே படுத்திருந்தாள். அங்கச்சியம்மாள் ஏன் என்றும் கேட்கவில்லை.

கணபதி தான் கூடவிருந்து கிழவியை அடக்கஞ் செய்தார். அங்கச்சியம்மாள் தன்போக்காகத் திமிர் படைத்து இருந்தாளே யன்றி திலகவதியை சாப்பிட வாவென்றும் அழைக்கவில்லை. இது கண்ட கணபதியே மனவருத்த முற்று அங்கச்சியம்மாளை நோக்கி "அடீ பாவீ! இந்த சமயத்தில் கூடவா உனக்குக் கல்மனம் கரையவில்லை. ஐயோ பாவம்! அனாதையாய்ப் பக்ஷிபோல புலம்பிக்கொண்டிருக்கும் அந்தப் பெண்ணை யழைத்து ஒரு வாய் சோறு போட்டால் என்ன! உன் கை உடைந்து விடுமா! கண் அவிந்து விடுமா! மகா பாவி நீதான்." என்று திட்டியவாறு, திலகவதியிடம் வந்தார்.

அப்போது இரவு 8-மணி இருக்கும். சவத்தை அடக்கஞ் செய்துவிட்டுத் தன் பிறவி இன்னதென்று தெரியாமல் புலம்பிக்கொண்டிருந்த திலகவதியைக் கண்டு "அம்மா! திலகம்! ஏன் புலம்புகின்றாய்! ஏதோ உதவாக் கட்டையாக விருந்த கிழம் மாண்டதற்கு அழுவானேன்! அந்த கிழவியினுடைய பாதை நீங்கி அவள் இறந்ததே நல்லதென்று நீ தேறவேண்டாமா! எத்தனை வருடமாக இந்த மாதிரியான துன்பத்தை அவள் அனுபவிப்பது? எல்லோரும் ஒரு தினம் இறக்கவேண்டியவர்களல்லவா! இதை நினைக்காதே; வா; சாப்பிட வா! எழுந்திரம்மா!" என்று கணபதி அன்பொழுகக் கூறி அழைத்தார்.

வினா:—இன்றைய வியாபாரத்தில் எத்தனை ரூபாய் லாபங் கிடைத்தது?

விடை:—10 படி அரிசிக்கும், அதற்குத் தக்க சாமான்களுக்கும் சனி பிடித்தது. சாமியார் வந்திருப்பதாயும் அதற்காகப் பணங் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டார்கள். பஞ்ச காலத்தில் பணமேது. மேற்படியைக் கொடுத்ததுதான் லாபமாயிற்று.

இதைக் கேட்ட திலகவதி கணபதியின் காலில் விழுந்து அபாரமான துக்கத்துடன் புலம்பியபடியே "மாமா! என்னை மன்னிக்கவேண்டும். நான் கேவலம் திக்கற்ற அனுதை என்பது இந்த சவத்தை அப்புறப்படுத்திய பிறகுதான் எனக்குத் தெரிகிறது. கிழமாக விருந்தவளாயினும் எனக்குச் சொந்தம் என்ற ஓர் பெருமைச் சொல்லிற்கு ஏதுவாக விருந்தாள். அதுவும் நீங்கிவிட்டது. மாமா! இன்றைய வரையில் நான் தங்களிடம் ஒரு வார்த்தையும் கூறியதில்லை. இன்று என்னுள்ளம் என்னை யறியாது தத்தளிக்கின்றது. இந்த கிழவி எனக்கு எந்த முறையில் பாட்டியாக வேண்டும்? என்னுடைய பூர்வீகம் என்ன! என்னை இந்த உலகத்திற்கு ஓர் அபாக்யவதியாகக் கடவுள் அனுப்பியதற்கு என்னைத் தாங்கி வந்த கர்த்தர்கள் இருவர் இருந்தே தீரவேண்டு மல்லவா! அப்படிப் பட்டவர்கள்—என் தாயார், தகப்பனர்—எனக்கில்லையா! அவர்களைப் பற்றிய தகவல்கூட எனக்குக் கூறலாகாதா! தாங்கள் எனக்கு என்ன ஆகவேண்டும்? இந்த விஷயங்களை நானறியச் சொல்லலாகாதா!" என்று கல்லும் கரைந்துருகும்படிக்குக் கேட்டாள்.

இவ்விதம் தன்னைக் கேட்கப்போகிறுள் என்று கணபதி கனவிலும் கருதவில்லை யாதலால் அவனை இக்கேள்விகள் திடுக்கிடச் செய்தன. நிலைமை மிகவும் பயங்கரமாகத் தோன்றியது. தான் என்ன விதமான பதில் கூறுவதென்று சற்றுதிகைத்தான். ஏதேதோ பழய கதைகள் எல்லாம் நினைவிற்கு வந்துவிட்டன. இதனுல் கணபதியின் முகமே மாறியது. திலகவதியைத் தூக்கி நிறுத்தினுன். பதில் சொல்லத் தடமாடிக்கொண் டிருக்கையில் இந்த வைபவத்தை எல்லாம் பிடாரியம்மாள் பார்த்துக்கொண்டே வந்துவிட்டாள். அகங்காரம் தலைக்கு மிஞ்சிவிட்டது. "ஐயோ! அம்மாடி! என் குடிக்கு அனர்த்தம் வந்து விட்டதே! என் வாழ்வில் மண்

ஒவ்வொருவருடைய வாழ் நாளிலும் ஒரு சிறிய பாபமாவது செய்யாது இருக்க முடியாதாம். அவரவர்களின் மனம் அதை நினைத்துச் சிந்தியாமலிருக்கவும் முடியாதாம். அவரவர்களின் செய்கைக்கு ஏற்ற உணர்ச்சியை அவ்வப்போது நினைக்கையில் பயங்கரமாகத் தோன்றுமாம்.

விழுந்து விட்டதே! அடி! பாவி சண்டாளி! உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்த த்ரோகி! அட பாவி! இந்த திருட்டுத் தனம் எத்தனை நாளாக நடக்கிறதடா! ஐயோ! என் வயிறு எரி கிறதே! என் தேகம் பதறுகிறதே!" என்று கூறி பட்டார் பட்டார் என்று வாயிலும், வயிற்றிலும், தலையிலும் அடித்துக்கொண்டு பெரிய சத்தமிட்டுப் புலம்பினாள்.

இந்த பெரும் அபாண்டமான வார்த்தையைக் கேட்ட திலக வதிக்கும் கணபதிக்கும் மனம் துள்ளித் துடித்தது. கணபதிக்கு உண்மையிலேயே ஆத்திரம் வந்து விட்டது. தாங்கமாட்டாத கோபத்தோடு "துஷ்டே! உன்னுடைய ஆத்திரமும், பொறாமை யும், கொள்ளித்தனமும் ஒன்றுகூடி இவ்விதமெல்லாம் ஆடுகிறாயா! உன்னதிகாரத்தின் திமிர் இவ்விதம் செய்கிறதா!" என்று பளீர் பளீர் என்று நான்கு அறை கொடுத்து அவளை ஓரே தள்ளாகத் தள்ளிவிட்டார்.

வெறும் வாயை மெல்லும் அம்மையாருக்கு ஒரு படி அவல் கிடைத்தால் போதுமல்லவா! அவ்வளவுதான் வந்துவிட்டது கோபம். ரௌத்ராகாரமாகப் பொங்கி வழிந்தது. தன் வேலைக் காரியின் எதிரில் தன்னை அவமானப் படுத்தினதற்காகப் பதிலுக் குப் பதில் செய்துவிட எண்ணினாள். உடனே தன்னையே தான் சமாளித்துக்கொண்டு பலவிதமான யோசனைகளைச் செய்தவாறு சில காரணங்களை உத்தேசித்து தன் ஆத்திரத்தைச் சற்று அடக்கிக் கொண்டு திலகவதி, கணபதி இருவரிடத்திலும் பேசாமலிருந்து விட்டாள்.

கணபதியிடத்தில் பேசாமலேயே சில தினங்கள் கடத்தினாள். சுகுமாரன் அங்கச்சியம்மாளின் வீட்டிற்குப் பக்கத்து வீட்டி லேயே ஒரு ரூம் வாடகைக்கு வைத்துக்கொண்டு டைப்ரைடிங்கு மெஷின் சிலவற்றை அங்கு வாங்கி டைப்ரைடிங்கு இன்ஸ்டிட்யூட்

அயோக்யத்தனமாகப் பேசி அதிகாரம் செய்வதையே சிலர் கௌரவ மாகக் கருதுகிறார்கள். அதனால் பிற்காலத்தில் தமக்கே கேடு விளையும் என்பதைச் சிறிதும் உணர்வதில்லை.

என்று, ஒரு போர்டு போட்டு அதில் எல்லோரும் டைப்பு அடிக்கக் கற்றுக்கொள்வதோ, அன்றுடம் கூலிக்கு அடிப்பதோ இரண்டும் செய்துகொள்ள அனுமதி கொடுத்திருந்தான்.

அங்கச்சியம்மாளின் வீட்டிற்கு அடுத்த வீட்டு மெத்தைமே லுள்ள பெரிய ஹாலேயே சுகுமாரன் எடுத்துக்கொண்டிருந்தான். அந்த ஹாலுக்குப் பக்கத்திலுள்ள மொட்டை மாடியும் அங்கச்சி யம்மாளின் வீட்டு மாடியும் பக்கத்தில் இருப்பதால் இந்த மெத் தையிலிருந்து நன்றாகப் பார்க்கவும் பேசவும் வசதி கிடைத்தி ருந்தது.

திலகவதிக்கு சுகுமாரனுடைய கருத்து நன்றாகத் தெரியுமாத லால் அவள் மேல் மெத்தைக்குச் செல்லும் சமயங்களில் அவனிடம் இரண்டொரு வார்த்தைகள் மட்டும் பேசிவிட்டு அதிகநேரம் நிற்கா மல் வந்துவிடுவாள். திலகவதிக்கு எதிரில் அன்று தன்னை அடித்ததை எண்ணி அங்கச்சியம்மாள் திலகவதியின் மீதுள்ள கோபத்தால் அவளுடன் பேசாமலேயே அவளைப்பற்றிக் கவனித்துவந்தாள். திலக வதி மெத்தையில் சுகுமாரனுடன் பேசுவதை நன்றாகக் கவனித்து விட்டாள். இதை யோர் வ்யாஜமாகக் கொண்டு பின்னும் ஆத்திரப் பட்டு ஒரு தினம் கணபதியிடம் தானே வலுவில் சென்று பேசத் தொடங்கி "நான் சொல்வதெல்லாம் உங்களுக்குக் கோபந்தான். எல்லாம் விரோதமாகத்தான் தோன்றும். அன்று என்னை அந்தச் சிறுக்கி எதிரில் அவமானமுறும்படி அடித்தீர்கள். அந்தப் பெண் ணைப் பற்றி என்னிடம் ஒன்றும் கூறவும் மாட்டேன் என்கிறீர்கள். அந்தப் பெண்ணின் நடத்தையோ, மிகவும் மோசமாக விருக்கிறது. அதை நான் வெகு நாட்களாகக் கவனித்து வருகிறேன். இப்போது சில தினங்களாக அவள் அடுத்த வீட்டில் வந்துள்ள ஓர் தடிய னுடன் உறவு வைத்துக் கொண்டு சதா மேல் மாடிக்குச் சென்று

பெற்றோர்கள் வையும்போது மனத்திற்கு மிகுந்த கஷ்டம். ஆனல் இன்னும் சில விடங்களில் சென்று பார்க்கையில் தனக்குக் கிடைத்த வசவே கொஞ்சம் எனத் தோன்றுகிறது. எல்லாம் தனது நன்மைக் கென்றுணர்வதே புத்திசாலித்தனம்.

பேசுகிறாள். இதெல்லாம் நல்ல நியாயந்தானே! இத்தகைய ஊழல் களைச் சொன்னால் நான் பொல்லாதவள்.'' என்று பெரியதோர் உப தேசம் செய்யலானாள்.

இதைக் கேட்ட கணபதிக்கு நம்பிக்கை கொள்ள வில்லை எனினும் "இதைப் பற்றி நான் பிறகு கவனிக்கின்றேன்.'' என்று கூறி அனுப்பி விட்டான். இதைக்கேட்ட அங்கச்சியம்மாள் "சரியான வழியில் நெருப்பு பற்றிக் கொண்ட பிறகு பின்னும் அதைத் தூண்டுவோம்.'' என்று தீர்மானித்துக் கொண்டாள்.

குடு குடுப்பைக்காரன் அங்கச்சியம்மாளிடம் இது விஷயமாக ரகஸியம் பேச வருவதற்குச் சரியான இடம் புறக்கடைப் பக்க மென்றே தீர்மானித்து அவ்விடத்திலேயே வந்து பேசுவான். அவ் வாறு ஒரு தினம் வந்து பேசுகையில் அன்றிரவு புதையல் கண் டுள்ள விடத்திற்குச் சென்றால் அங்கு புதையலைக் கண்ணால் பார்ப்ப தோடு சில தங்க நாணயத்தையும் கையில் எடுத்துக் காட்டுவதாகக் குடுகுடுப்பைக்காரன் கூறினான்.

அங்கச்சியம்மாள் அபாரமான சந்தோஷத்தை யடைந்து அன்றிரவு முன்னெச்சரிக்கையாக நகைகள் ஒன்றும் போட்டுக் கொள்ளாமல் வீட்டிலேயே வைத்து விட்டுச் சோமு வுடன் முன்னதாக ஏற்பாடு செய்து கொண்டு முன்பு சென்றது போலவே அவ்விடம் சென்றாள். அப்போதையப்போலவே பூதங்கள் "ஹா! ஹீ!'' என்று பெருத்த ஆர்ப்பாட்டம் செய்து கொண் டிருந்தன.

குடுகுடுப்பைக்காரன் தூபமும் மந்திரமும் போட்டு அவை களை அப்புறப் படுத்திவிட்டுப் புதையலின் அருகில் அங்கச்சியம் மாளை யழைத்துச் சென்று காட்டினான். அங்கச்சியம்மாளின் சந்

நாம் எதிர்பாராத தருணம் ஒரு முக்கிய காரியத்தைச் செய்யவேண் டிய அவசியம் நேர்ந்துவிடும்போது உண்டாகும் திகிலும் கவலையும் சொல் லச் சாத்யமன்று. அதனுடைய ஜெயாபஜயம் கடவுளின் கையிலிருக்கி றது என்பதை அறிந்திருந்தும் அதை அநுபவத்தில் காட்ட முடிவதில்லை.

தோஷமும் ஆச்சரியமும் கரை புரண்டுவிட்டன. தங்கப் பாளங்கள், சவரன்கள் எல்லாம் கலந்து இரண்டு மூன்று பெரிய தவலைகளில் இருக்கக் கண்டாள். அதிலிருந்து ஒரு பாளத்தை எடுத்துக்கொள் ளச் சொன்னான் குடுகுடுப்பைக்காரன்.

அங்கச்சியம்மாளுக்கு அதில் கை வைப்பதற்குப் பயமாக விருந்தது. எனினும் மெல்ல தைரியப் படுத்திக்கொண்டு கை வைக் கப் போனாள். இதற்குள் பூதங்கள் ஒன்றுகூடி "ஹா! மோசமா செய் கிறாய்! ஆடு வேண்டும், கோழி வேண்டும், ஆசை நரபலி வேண்டும். இம் மூன்றையும் கொடுக்காமலேயே ஏய்த்துவிடலாம் என்று பார்க் கிறாயோ! இதோ பார் பாம்பு" என்றவுடன் 'புஸ்ஸ் புஸ்ஸ்!' என்று சீறிக்கொண்டே பெரிய படத்துடன் பாம்பு ஒன்று வந்து தவலையின் பக்கத்தில் சுற்றிக் கொண்டது.

இதைக் கண்டதும் அங்கச்சியம்மாள் நடு நடுங்கிப் போய் விட்டாள். பாம்பென்றால் படையும் நடுங்குமல்லவா! அங்கச்சியம் மாள் முன்னே வைத்த காலைப் பின்னே வைத்து நடந்தவாறு "ஆதி சேஷா! போதும்! போதும். உன்னுடைய விச்வரூபம் போதும். பேதை என்னை பயமுறச் செய்யாதே! நீ கேட்டதுபோல ஆடு கோழி, நர பலி எல்லாம் உனக்குக் கொடுக்கிறேன். கட்டாயம் தட் டாது கொடுக்கிறேன்" என்று கூறி விழுந்து நமஸ்கரித்துக் கன்னத் தில் அறைந்துகொண்டாள். பிறகு பாம்பும் சிறுகச் சிறுக மறைந்தது.

குடுகுடுப்பைக்காரன் கொஞ்சம் விபூதியை அள்ளிப் புதையல் உள்ள பாத்திரத்தின்மேல் போட்டான். அடுத்த நிமிடமே அந்த தவலைக்குள் பளிச்சென்ற ஓர் ஜோதி தெரிந்தது. கண்களைப் பறிக் கும் தங்கப் பாளங்கள் அங்கச்சியம்மாளின் ஆசையைக் கொள்ளை கொண்டன. அவள் தேகமே பூரித்துப் பரவசமடைந்தாள். "அம்மா! மேலிருக்கும் ஒரு பாளத்தை எடுத்துக் கொள்ளுங்கள் இனி பய

எத்தனையோ விதமான தைரியங்களைப் பிறருக்குக் கூறலாம், எழுத லாம். ஆனால் தனக்கு ஒரு சந்தர்ப்பம் நேருங்கால் அந்த தைரியம் எங்கோ மறைந்து விடுகின்றது. உலகமே இப்படித்தான் போலும்.

மில்லை." என்று குடுகுடுப்பைக்காரன் கூறினன். அங்கச்சியம்மாள் ஆவலோடு அதை எடுத்துக்கொண்டாள். தூக்க முடியாத கனமாக விருந்தது கண்டு பெருமகிழ்ச்சி கொண்டு அதைத் தன் கையிலேயே வெகு ஜாக்ரதையாக வைத்துக் கொண்டாள். சந்தோஷ அதிர்ச்சியினால் கீழே விழாதபடி தன் முன்தாணையினால் மூடினள்.

சோமுவுக்கு இதைப் பார்த்த வளவிலேயே சகலமான புதையலும் கைக்கு வந்த மாதிரியே எண்ணி விட்டான். கோகுலத்தில் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா அவதாரம் செய்ததும் அந்தக் குழந்தையை கோபிகளும் மற்றையோரும் பேராநந்தப் பூரிதராய் வாங்கி வாங்கி, போட்டி போட்டு முத்த மிட்டதுபோல அந்த தங்கப் பாளத்தை சோமு அங்கச்சியம்மாளின் கையிலிருந்து வாங்கிப் பார்க்கிறன். களிவெறி கொண்டு குதிக்கின்றன். உடனே அங்கச்சியம்மாள் வாங்கி மகிழ்கிறள். இவ்விதமான காட்சியைக் குடுகுடுப்பைக்காரன் கண்டு மகிழ்ச்சி கொண்டு நிற்கின்றன்.

பிறகு எல்லோரும் புறப்பட்டார்கள். குடுகுடுப்பைக்காரன் "தாயே! இந்த பாளத்தை வீட்டில் வெகு ஜாக்ரதையான இடத்தில் கொண்டு வைக்க வேண்டும். இது வீட்டிலிருப்பதே பிறரறியலாகாது. அதன்றி முக்கியமாக இதைச் செலவு செய்துவிடக் கூடாது. இதை மாற்ற வேண்டுமென்று நீங்கள் மனத்தினல் நினைத்தால்கூட உடனே பெரிய ஆபத்து நேர்ந்து விடும். பூதத்திற்கு நாமே இரையாகி விடவும் நேரும். இதை வெகு முக்யமாகக் கவனிக்க வேண்டும்; பிறகு என்பேரில் சொல்வதற்கில்லை. ஜாக்ரதை!" என்று வெகு அழுத்தமாயும், கண்டிப்பாயும் கூறினன.

இது கேட்ட அங்கச்சியம்மாள் தான் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு வாக்குக் கொடுத்தாள். சோமுவும் அதற்கு உடந்தையாய்த் தாளம் தட்டினன். பிறகு எல்லோரும் அவ்விடம் விட்டுப் புறப்பட்டார்கள். முன்புபோல எங்கு கள்வர்கள் வந்துவிடப்

வேலைகளை யெல்லாம் ஒழுங்காக முடித்துவிட்டுக் கூலி வாங்கிக் கொள்வது என்னும் வழக்கம் இக்காலத்தில் இல்லைபோலும். கலி முற்றும் ஆட்சியில் நீதியும் உண்டா?

போகிறார்களோ! என்று மனத்தில் பயந்தவாறு வீடு வந்து சேர்ந்தார்கள். அப்போது இரவு 2 மணி இருக்கும். அங்கச்சியம்மாள் மெல்ல சந்தடி செய்யாமல் வந்து தங்க பாளத்தை ஓர் பத்திரமான இடத்தில் பதுக்கி வைத்து விட்டு அதன் பிறகு வந்து படுத்தாள்.

அவளுக்கு நினைவெல்லாம் அந்த தங்க பாளத்தின்மீதே இருந்ததால் நித்திரையே கொள்ளவில்லை. அந்த புதையல் கண்ட காட்சியை எண்ணி எண்ணி இரவைக் கழித்தாள். காலையில் எழுந்த வுடன் முதலில் தங்க பாளத்தருகில் சென்று அதை வெளியில் எடுத்து ஓர் குழந்தையைக் குலாவுவது போலான சந்தோஷத்துடன் அதைக் கொஞ்சிக் குலாவி அபரிமிதமான ஆநந்தத்தோடு பார்க்கிறாள். இப்புறம் அப்புறம் யாரேனும் வந்துவிடப் போகிறார்களே என்று திரும்பிப் பார்த்துக் கொண்டே இருக்கிறாள். ஆகா! இத்தகைய அதிர்ஷ்ட காலம் நமக்கு வரும் என்று யாரேனும்—அன்றி நான்தான்—எதிர்பார்த்திருந்தேனா! இந்த ஒரு தங்க பாளத்தைப் பார்க்கும்போதே இத்தகைய ஆநந்தமாக விருக்கையில் இன்னும் இரண்டு அண்டாவிலுள்ள பாளங்களைப் பார்த்தால் எவ்விதம்தானிருக்கும்? ஹ்ஹா ஹ்ஹா!'' என்று தனக்குள்ளேயே சிரித்தாள்; பொங்கி மகிழ்ந்தாள்.

இப்படியே சில தினங்களாயின. ஒரு தினம் குடுகுடுப்பைக்காரன் பின்புறமாக வந்து அங்கச்சியம்மாளைக் கண்டு பேசுவதற்குப் பதுங்கிப் பதுங்கிப் பார்த்துக் கொண்டிருந்தான். அங்கச்சியம்மாளின் வீட்டிற்கு அடுத்த வீட்டிலிருக்கும் சுகுமாரன் சில தினங்களாக திலகவதியைப் பற்றிய பூர்வீகத்தை விசாரித்தறிவதையே தன் சொந்த வேலையாகக் கொண்டான். அது விஷயமாக அவன் பாடு பட்டு வருவதால் இந்த வீட்டினரையும் கவனித்து வந்தான்.

குடுகுடுப்பைக்காரன் அந்த அம்மாளுடன் பேசுவதோ, புதையல் விஷயமோ ஒன்றும் சுகுமாரனுக்குத் தெரியாது. அன்று குடு

தனத்தினாலேயும், சரீரத்தினாலேயும் எத்தனையோ பாடுபட்ட மனிதர்களைத் துவேஷித்துக் கொள்வதானது தன் கண்ணைத் தன் விரலாலேயே குத்திக்கொள்வதற்கு ஒப்பாகின்றது.

குடுப்பைக்காரன் புறக்கடைப் பக்கமாக வந்து நிற்பதை மட்டும் சுகு மாரன் பார்த்து விட்டான். அச்சமயம் குடுகுடுப்பைக்காரன் குடு குடுப்பை உடையில் வராமல் ஓர் சாதாரண மனிதன் போல வந் திருந்தான். சுகுமாரன் இவனை யார் என்று அறிவதற்காக அந்த வீட்டிற்கும் இந்த வீட்டிற்கும் நடுவிலுள்ள ஜன்னலின் பக்கலில் ஒளிந்து கொண்டான்.

அப்போது மாலை நேரமாதலால் இருள் நன்றாகச் சூழ்ந்த சமயமாயிற்று. தான் வந்த சேதியை அங்கச்சியம்மாளுக்கு அறி விப்பதற்கு அவன் ஓர் மாட்டைப் போலக் கத்துவது வழக்கம். அம் மாதிரியே சற்று நேரத்திற்கொரு தரம் மாடு கத்துவதுபோல இரண்டு மூன்று முறை கத்தினன். உடனே உள்ளிருந்து அங்கச்சி அம்மாள் வந்தாள்.

குடுகுடுப்பாண்டி யிடத்தில் அவள் ஏதோ ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டு "அப்பா! இப்போது வீட்டில் யாரோ விருந்தா ளிகள் வந்திருக்கிறார்கள். பேசுவதற்கு முடியாமையால் சுருக்கமாக விஷயத்தை இதில் எழுதி இருக்கிறேன். இதோடு நூறு ரூபாய் நோட்டுகள் இரண்டு வைத்திருக்கிறேன். நாளைய தினம் விடியற் காலையில் வரும்போது இங்கு வராதே! சாதாரண உடையில் வந்து என்னைப் பாரு. நீ போய்விடு" என்று வெகு மெல்லக் காதோடு பேசினள்.

இவ் விஷயங்கள் சுகுமாரன் காதில் எதுவும் படவில்லை. எனி னும் இவர்கள் ஏதோ முக்கியமான ரகஸியம் பேசுவதாகவும், அங்கச்சியம்மாள் கெட்ட நடத்தைக்காரியாக விருக்கிறாள் என் றும் தெரிந்துகொண்டான். குடுகுடுப்பைக்காரன் "ஆனல் சரி. நான் வருகிறேன்." என்று கூறி நான்கடி சென்று மீண்டும் திரும்பி வந்து "அம்மா! முக்கிய விஷயத்தை மறந்து விட்டேனே! தங்கள் தம்பி யார் சொல்லியதில் பலிக்குக் கிழவியைச் சரிப் படுத்தி விடலாம்

பிறருடைய மனமும், வயிறும் நொந்து புண்ணாகச் செய்வதின் பலன் எத்தகையோர்க்கும் மிக எளிதிலேயே கிடைத்துவிடும். ஆனல் செய்யும் போது அது அவர்கட்குத் தெரிகின்றதா?

என்று கூறினர். கிழவி இறந்துவிட்டதால் வேறு யாரை இதற்குப் பிடித்திருக்கிறீர்கள். இல்லையேல் நான் இதற்குத் தயார் செய்யட்டுமா! "என்றான்."

இது கேட்ட அங்கச்சியம்மாள் "நீ அதற்கு ஒன்றும் செய்ய வேண்டாம். இச்சமயம் அந்த வேலை உதவாது. போதாக்காலமாக நீ அகப்பட்டுக் கொண்டால் மிகவும் ஆபத்தாக முடியும். அதைப் பற்றி நீ கவலை கொள்ள வேண்டாம். தண்டத்திற்குப் பிண்டத்தைப் போட்டு வளர்க்கும் ஓர் உதவாக்கட்டை என்னிட மிருக்கிறது: அதை நான் பலிக்குத் தயாராக வைத்திருக்கிறேன். சீக்கிரம் வேலை யாகட்டும். என் புருஷன் அறிவதற்குள் காரியத்தில் ஜெயித்துவிட வேண்டும்—என்றாள்.

குடுகுடுப்பைக்காரனும் 'சரி' என்று போய்விட்டான். அங்கச்சியம்மாள் அங்கு பின்னும் நாலடி சென்று பேசுகையில், உள்ளே போகவேண்டிய அவசரத்தில் சற்று வாய் விட்டுக் கூறிய வார்த்தைகள் சுகுமாரன் காதில் விழுந்தன. திலகவதியைத்தான் பலி கொடுக்கப் போகிறார்கள் என்ற விவரம் இவனுக்கு நன்றாகத் தெரியாவிடினும் திலகவதியை ஏதோ மோசம் செய்து அந்த மனிதனுக்கு விற்றுவிடப் போவதாகவோ, அன்றி இன்னும் ஏதோ சதியாலோசனை செய்வதாகவோ மட்டும் நன்றாகத் தெரிந்து கொண்டான். "பலிக்குத் தயாராகவைத்திருக்கிறேன்" என்று கூறிய வார்த்தைகள் மட்டும் சுகுமாரனுக்கு நன்றாக அர்த்தமாகாவிடினும் திலகவதிக்கு ஏதோ பெருத்த ஆபத்து வந்துவிட்டதென்ற சந்தேகம் மேலிட்டு விட்டது. இது ஓர் பேரிடி இடிக்கப் பெற்றது போலாய் விட்டது. பலி என்கிற பதம் அவன் மனத்தைத் துளைத்து விட்டது. "அந்த மனிதன் யார். அவன் எங்கு செல்கிறான்?" என்பதை அறியும் பொருட்டு அவனைப் பின் துடர வாரம்பித்தான்.

பத்திரிக்கை, புஸ்தகம் முதலிய பிரசுரிப்பவர்கள் தானத்தில் சிறந்த தான இரவல் தானத்திற்கென்று சில ஆயிரம் பிரதிகள் போட்டு அடுக்கினால் மிகவும் நலமாக விருக்கும் என்று இரவல் விழுங்கிகள் கிளைக்கின்றார்களாம்!

10-வது அதிகாரம்

திடுக்கிடும் சம்பவம்—மடந்தையின் பரிபவம்

கணபதி ஓர் தினம் தனது நண்பனின் வீட்டிற்குச் சென்றான். அன்று கணபதியினிடத்தில் அந்த சிநேகிதன் சரியாகப் பேசவே இல்லை. இது கணபதிக்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது. வலுவில் தானாகப் பேசிப் பார்த்தான். ஏதோ நிஷ்டூரமாகப் பதில் கொடுத்தான். இதன் காரணம் தெரியாத கணபதி வருந்திய மனத்தோடு வீட்டிற்கு வந்து இதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான்.

மறுதினம் அவனுடைய மற்ற சிநேகிதர் சிலரிடமிருந்து கடிதங்கள் வந்தன. அவற்றை ஆவலோடு படிக்கவாரம்பித்தான்.

“அன்புள்ள ஐயா!

நீர் இதுபரியந்தம் ஒரு நாளாவது தாங்கள் சொல்லிய வார்த்தையை—வாக்கு நாணயத்தை—விட்டுப் பிறழவில்லை என்ற மதிப்பை வைத்து நான் என்னுடைய முக்கிய அவசரத்திற்காக வைத்திருந்த பணத்தை நீங்கள் ஒரு வாரத்தில் திருப்பிக் கொடுப்பதாகக் கேட்டதால் கொடுத்தேன். ஒரு வாரம் என்றதற்கு ஒரு மாதம் நான் பொறுமையாக விருந்தும் கடைசி வரையில் பணம் வராமையினால் கடிதமனுப்பினேன். அதற்குத் துச்சமாக இவ்விதம் நீர் எழுதியது என் மனத்தைப் பிளக்கின்றது. உமது சிநேகிதம் போதும். நீர் பழய மாதிரியிலிருந்து விலகி விட்டதாக உமது செய்கை எடுத்துக்

எந்த விதத்திலும் குற்றமற்ற ஓர் உயர்ந்த காரியத்தைச் செய்வதற்கு நல்ல அறிவைச் செலுத்தி “இது நன்மையா! தீமையா!” என்பதை ஆராய்வதே இல்லை. இவ்விதமான சிறிய புத்தியினாலேயே நம் நாட்டில் சகல நன்மைகளையும் இழந்து விட்டோம்.

காட்டுகின்றது. ஆதலால் எனது பணத்தை—200 ரூபாயை—உடனே ரொக்கமாக அனுப்பிவிட்டு மறு காரியம் செய்யவும். இல்லையேல் நான் மேல்கொண்டு வழக்குத் தொடுப்பேன்.

இங்ஙனம்
தனகோடி"

என்றதைப் படித்ததும் கணபதிக்கு மிக்க ஆச்சரியமும், திடுக்கிடலும் உண்டாகி ஒரே மன அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டது. இதை மெல்ல அடக்கிக்கொண்டு மற்ற கடிதங்களைப் படிக்கலானான்.

"பிரியமுள்ள ஐயா!

உம்முடைய கடிதத்திலிருந்து நீர் பசுத்தோல் போர்த்த புலி என்றதை நன்றாகத் தெரிந்து கொண்டேன். உம்மிடம் அதிகம் பேச்சு வைத்துக்கொள்ள எனக்குப் பிடிக்கவில்லை. இதுவே கடைசிக் கடிதம். உடனே அடுத்த நிமிடம் எனக்குச் சேரவேண்டிய 100 ரூபாயை அனுப்பி வையுங்கள். இல்லையேல் நான் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வேன்.

இங்ஙனம்
குமாரசாமி."

என்பதைப் படிக்கையில் கணபதியின் தேகத்தில் தீப் பிடித்துக் கொண்டது போலாயிற்று. "ஐயோ! இதென்ன பேரிடி!" என்று நடுங்கியவாறு வேறு கடிதத்தைப் பிரித்தான். அதில்,

"ஐயா!

என்னைத் தாங்கள் முன் பின்னறியாத சமயத்தில் எனக்கு நீர் உதவியதை மனத்தில் கொண்டு நான் உமது கடிதங்கண்ட நிமிடமே தாமத மன்னியில் 100 ரூபாய் அனுப்பிக் கொடுத்தேன். நான் கேட்கக் கூடாதென்று ஒரு மாதம்

சங்கீதத்தில் சற்றும் பிடித்தமேயில்லாதவர்களைக்கூட சிலருடைய இனிமையான சாரீரம் பரவசமுறச் செய்து விடுவதோடு, நாளடைவில் அவர்களுக்கு நல்ல ராக ஞானமும் உண்டாக்கிவிடுகின்றது. இப்படியே அனேக விஷயங்களில் மாறுத லுண்டாக்கலாம்.

பொறுத்தேன். தாங்கள் எழுதிய கடிதத்தில் 10 தினத்தில் திருப்பிக் கொடுப்பதாய் எழுதியதை நம்பி நான் அனுப்பினேன். நான் திருப்பிக் கேட்டு எழுதிய கடிதத்திற்கு நீர் எழுதியுள்ள பதில் என் மனத்தைப் பிளக்கின்றது. "நீர் முன்பு வாங்கிக்கொண்ட பணத்தைத் திருப்பித்தாமலிருப்பதை மறந்துவிட்டு இப்போது கடன் கொடுத்ததாகக் கேட்கிறீரே'' என்று தாங்கள் எழுதியது தெய்வத்திற்குப் பொறுக்குமா? நீரும் பிள்ளைக் குட்டிக்காரர். நீர் பணத்தைத் திருப்பி வாங்கிக் கொண்டதற்கு எனக்கு ரசீது கொடுக்காவிடினும் அப்போது கூடவிருந்த மனிதர்கள் சாக்ஷியிருக்கிறார்கள். ஆதலால் என் பணத்தை உடனே அனுப்பவும். தாமதமாயின் வீண் வழக்காக முடியும்.

இங்ஙனம்
ராமானுஜன்.''

இதைப் படித்ததும் கணபதியின் மூளையே கிரு கிரு என்று சுழன்றது. "இக் கடிதமெல்லாம் உண்மையானவையா!'' என்று நடுங்கி விழிக்கின்றான். பின்னொரு கடிதத்தைப் பிரித்தான்.

"ஐயா!

என்னுடைய கக்ஷிக்காரராகிய நடேசனுக்குச் சேரவேண்டிய தொகையை இக் கடிதம் (நோட்டீஸ்) கண்ட மூன்று நாளைக்குள் சேர்ப்பிக்காவிடின் சட்டப்படிக்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

வேலாயுதம்
ஹைகோர்ட் வக்கீல்''

இந்த கடிதத்தோடு கணபதி பிரக்ஞையற்று விட்டவன்போலாய்விட்டான். அவனுடைய நிலைமையில் பிராணன் போய்விடும்

கைப்பதிலாகக் கடன் வாங்கும்போது ஏதோ புதையல் கிடைத்துவிட்ட மாதிரியான சந்தோஷமே அந்த அவசரத்தின் வேகத்தில் உண்டாகின்றது. திருப்பிக்கொடுக்கும் தவணை கிட்டும்போதும், வட்டி கொடுக்க வேண்டிய சமயத்திலுமல்லவா அதன் அருமைதெரியும்?

போல் இருக்கிறது. ஒரு பைசாவும் தான் கடன் வாங்காதிருக்கையில் இத்தனை பேர்களிடமிருந்து எப்படி இத்தகைய கடிதங்கள் வரும். இதென்ன ஆச்சரியம்!'' என்று அயோமயமாய் விட்டான். அவனுடைய நிலைமையை அப்போது பிறர் கவனித்திருப்பின் அவனுக்கு உன்மத்தம் பிடித்துவிட்டதாகவே திட்டமாய்க் கூறுவார்கள். அவனுக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. சற்று நேரம் பிரமை கொண்டவன்போல விழித்துப் பின் தனக்குத் தெரிந்த நண்பரின்—ஒரு வக்கீலின்—வீட்டிற்கு வேகமாய்ச் சென்றான். அவரிடம் இந்த கடிதங்களை எல்லாம் காட்டி "ஐயா! எனக்கு ஏதோ பெரிய ஆபத்து வந்திருக்கிறது. நான் நான்கு தினங்களாக ஊரிலில்லை. இன்று காலையில்தான் வந்தேன். முதலில் ஒரு சிநேகிதனின் வீட்டிற்குச் சென்றால் அங்கு என்னைச் சரியாய் கவனியாது குற்றமாகவே பார்த்துப் பேசினன். நான் வீட்டிற்கு வந்து என் தபால் பெட்டியைப் பார்க்க அதில் இந்தக் கடிதங்கள் எல்லாம் கிடந்தன. இதன் உண்மை யாதோ தெரியவில்லை. நான் சத்தியமாக ஒரு தம்பிடி கூடக் கடன் வாங்கவில்லை. என் மீது இத்தகைய பழி வந்திருப்பதற்குக் காரணம் என்னவோ தெரியவில்லை. இந்த ஆபத்திலிருந்து நீங்குவதற்கு நீங்கள்தான் வழி கூறவேண்டும்; என்னைக் காப்பாற்ற வேண்டும்.'' என்று கேட்டான்.

வக்கீல் சுந்தரேசனும் அக் கடிதங்களை எல்லாம் புரட்டிப் புரட்டிப் பலமுறைகள் படித்துப் பார்த்தார். பிறகு "கணபதி! இந்த கடிதங்களைக்கொண்டு நாம் எதுவும் சொல்லமுடியாது. இவற்றைப் பார்த்த யாரும் நீர் கடன் வாங்கியதாகத்தான் கூறுவார்கள். நீர் முதலில் இந்த கடிதமெழுதியுள்ள மனிதர்களிடத்திற்குச் சென்று இதன் தகவலை நன்றாகத் தீர விசாரித்துக் கொண்டு வாரும். பிறகு இதற்குமேல் நடக்க வேண்டியதைக் கவனிப்போம்'' என்றார்.

ஒருவர் இரவு பகல் கஷ்டப்பட்டு பகீரதப் பிரயத்தனம் செய்து ஒரு வட்டிக்குப் பணத்தை வாங்கி, கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுப்பது. அதைப் பெற்றவர்களோ இவர்களைக் கண் கலக்கியது ஒன்றுதான் மிச்சமாகக் கால் வட்டிக்கும் வகையற்றுத் திண்டாடிச் சின்ன பின்னம் செய்து விடுகிறார்கள். எல்லாம் வேளையின் கூற்று.

கணபதி:—ஐயா! நான் ஒருவருக்கும் கடிதமே எழுதவில்லை. ஒரு பைசா பணமும் பெறவில்லை. அங்ஙனமிருக்க இந்த அபாண்டமான கடிதங்களைக் குறித்து நான் என்ன கேட்பது? எனக்கு ஏதோ நடுக்கலாக விருக்கிறதே!

வக்கீ:—வாஸ்தவந்தான். எனக்கே பெருத்த மன அதிர்ச்சியாக விருக்கிறது. இந்த விஷயத்தை நன்றாக விசாரித்தறிய வேண்டியது கடமை. இதை விடக்கூடாது. நீர் முதலில் அவர்களின் வீட்டிற்குச் சென்று "யார் வந்து நான் கேட்டதாகப் பணம் கேட்டார்கள்? யாரிடம் நீங்கள் கொடுத்தீர்கள்? அதற்கு ஆதாரம் எங்கே?" என்ற விஷயங்களைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டு வாருங்கள். பிறகு யோசிக்கலாம்." என்றார்.

கணபதிக்கு அப்போதிருக்கும் நிலைமையில் மனம் குழம்பிப் போய் அபாரமான திகிலுடன் தத்தளித்தது. "கடவுளே! நான் ஒரு பாபமும் அறியாதிருக்கையில் நிரபராதியான என்மேல் ஏன் இப்படிப்பட்ட பெரும் பாறையைப் புரட்டுகிறாய்! ஐயோ! நான் என்ன செய்வேன்?" என்று வருந்தியவாறு, நடுக்கலுடன் முதல் கடிதமெழுதிய நண்பனின் வீட்டிற்குச் சென்றான்.

கணபதியைக் கண்ட தனகோடி, தன் கடிதத்தைக் கண்டு கணபதி பணத்துடன் வந்திருப்பதாக எண்ணிவிட்டான். ஆயினும் பழையபடி பேசாமல் ஏதோ ஒப்புக்கு உட்காரச் செய்து விசாரித்தான்.

கணபதி:—ஐயா! நீர் எழுதியுள்ள இக் கடிதம் என்னைக் கலக்குகிறது. இதென்ன அபாண்டக் கடிதம். நான் ஒரு பைசா கூட உம்மிடம் வாங்காதிருக்கையில் நீர் இப்படி எழுதியிருப்பது எனக்கு மிகவும் வியப்பாக விருக்கிறது. ஒரு வேளை நீங்கள் இதை யாருக்கேனும் அனுப்பவேண்டியதை ஞாபக மறதியாக எனக்கு

அகம்பாவத்துடன் பேசும் முடுக்கும் கர்வமும் அப்போது தெரியாது. அந்த அகம்பாவம் என்கிற கிளை முறிந்து கீழே விழும் சமயந்தான் தெரிய வரும்; தனது குரங்கு புத்தியின் போக்கும் தெரியும்.

அனுப்பி விட்டீர்களோ, என்று சந்தேகத்துடன் இதைக் கேட்டுக் கொண்டு போகவே வந்தேன். இதென்ன விஷயம்?

தனகோடி:—(இதைக் கேட்டு அடங்காத ஆத்திரத்தோடு) "என்ன! என்ன! நீர் ஒரு பைசாகூட வாங்கவில்லையா! ஓகோ! கடன்காரர்களை ஏமாற்றுவதில் இதொரு வழியா! பேஷ்! நான் மூளையுடன்தான் இருக்கிறேன். இக் கடிதத்தை உமக்கேதான் அனுப்பினேன். முழு பூசனிக்காயை இலைச் சோற்றில் மறைக்க முடியுமா! நீர் கடிதம் எழுதி உங்கள் வீட்டிலுள்ள திலகவதி என்கிற பெண்ணினிடத்தில் அனுப்பியதை மறந்தீர்போலும். நீர் நாணயமாய்க் கொடுக்கக்கூடிய ஆசாமியாயிற்றே என்று பெண்பிள்ளையின் மூலமாக வந்த கடிதத்திற்கு நான் பணங் கொடுத்துதவியதற்குப் பட்டை நாமத்தை பறக்கச் சாத்த எண்ணு இதீரோ! எடுமையா பணத்தை.

கண:—ஆ! திலகவதியிடம் நான் கடிதமனுப்பினேனு! ஐயோ! இது பெரும் மோசம். நான் இன்று பரியந்தம் ஒரு நாளும் அப்ப டிச் செய்ததே இல்லை. எங்கே அந்த;கடிதத்தைக் காட்டும்.—என் ருன். உடனே தனகோடி உள்ளே சென்று கடிதத்தைக் கொண்டு வந்து 'இதோ பாரும்' என்று தன் கையில் வைத்துக்கொண்டே காட்டினுன்.

இதைப் பார்த்த கணபதிக்குத் திடுக்கிட்டது. "இக்கை யெழுத்து என்னுடைய தென்பதில் சற்றும் சந்தேகமே இல்லை. கடிதம் டைப்பு செய்திருக்கிறதே! இதென்ன விபரீதம்! ஐயா! தன கோடீ! என்னை ஏதோ சித்திரவதை செய்கின்றது. சத்தியமாக நான் இக்கடிதத்தை எழுதவில்லை. இதை யாரோ கள்ளக் கையொப்ப மிட்டு என்னை மோசம் செய்திருப்பதாக நன்கு தெரிகின்றது.

தினம் தபால் பெட்டியைத் திறக்கு முன்பும், தபால்காரன் மணி யார்டர் பீட்டில் வருவதற்கு முன்பும் பெரிய ஆவல். எதிர் பார்ப்பு. இரண்டும் எதிர் பார்த்தபடி பலன் கிடைக்காவிடில் பெரும் ஏமாற்றம். எதிர்பார்ப்பும் ஏமாற்றமுமே உலகத்தில் பெரும்பாலும் நடக்கின்றன.

உங்களால் அனுப்பப்பட்டதாகச் சொல்லும் பணத்தை நான் கண்ணால் பார்க்கவுமில்லை" என்று குடல் நடுங்கக் கூறினன்.

சீற்றங்கொண்ட சர்ப்பம்போல தனகோடி "என்னய்யா விளையாடுகிறீர்? உம்முடைய வீட்டுப் பெண்ணிடத்திலேயே நீர் அனுப்பிப் பெற்றுக்கொண்டு இவ்விதம் ஏமாற்றமான வார்த்தையைக் கூறுகிறீர். இது வெகு அழகு எனக்கு முதலில் பணத்தை வைத்துவிட்டு மறு காரியம் செய்யும்" என்றார்.

தீத்தளித்த மனத்துடன் கணபதி "ஐயா! நான் நாணயக்காரன் என்பதை நம்பித் தாம் பணங்கொடுத்ததாகச் சொல்கிறீர் அல்லவா! அவ்வித நம்பிக்கையை இன்னும் சில தினங்களுக்கு என்னிடம் காட்டவேண்டுமென்று நான் உங்களை மிகவும் ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறேன். கடவுள் ஆணையாக நான் இந்த மோசடியில் சம்மந்தப்படவில்லை. என்னுடைய வார்த்தையை நம்பவேண்டும்.

தாங்கள் எழுதுவதுபோலவே எனக்கு இன்னும் பலபேரிடமிருந்து இம்மாதிரி கடிதங்கள் வந்திருக்கின்றன. இது கட்டாயம் கள்ளக் கையொப்பந்தான் என்று எனக்கு திட்டமாகத் தோன்றுகிறது. இதைப் பற்றி நான் உடனே போலீஸில் தகவல் கொடுக்கப்போகிறேன். தங்களையே சாக்ஷியாகப் போட்டே இவ்விஷயத்தைப் போலீஸாரிடம் கூறப்போகிறேன். என் வீட்டில் சென்று அந்தப் பெண்ணை விசாரிக்கின்றேன். நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு மற்ற கடிதங்கள் அனுப்பியவர்களின் வீடுகளுக்குச் சென்று விசாரித்தான்.

ஒவ்வொரு வீட்டிலும் இவ்விதமான கடிதம் தன் கையெழுத்துடனேயே இருப்பதைக் கண்டு அபாரமான வியப்பும் திகைப்பும் ஆத்திரமும் கொண்டான். எல்லோரும் திலகவதியே கடிதம்

எந்த காரியத்தைக் குறித்து யார் முதலில் ஆக்ஷேபிக்கின்றார்களோ, அவர்களே அதற்குப் பிறகு அனுமதியளிப்பது இயல்பாகிவிட்டது. முன்பே ஆதரவளித்திருந்தால் வீண் சச்சரவுகள் நேராதிருக்குமல்லவா! பின் புத்தியே மிகுந்துவிடுகின்றது.

கொண்டுவந்ததாயும் அவளிடமே பணத்தைக் கொடுத்தனுப்பியதா யும், அவள் படித்த பெண்ணுகையினுல் பணம் பெற்றுக்கொண்ட தற்காக அவளிடம் தாம் கையெழுத்து வாங்கிக்கொண்டிருப்பதா யும் கூறிச் சிலர் அவள் கையொப்ப ரசீதையும் காட்டினுர்கள்.

இவைகளேக் கண்ட கணபதிக்குப் பின்னும் ஆயிரம் மடங்கு அதிகரித்த ஆத்திரம் கட்டு மீறிப் பொங்கிவிட்டது. “ஐயோ! இந்த அனியாயம் வெகு விபரீதமாக விருக்கிறதே!'' என்று பதைத் தவாறு இந்த விஷயத்தைப் போலீஸில் தகவல் கொடுப்பதாக அவர்களிடத்திலும் கூறி விட்டு வீட்டிற்கு வந்தான். கோபமும் மன அதிர்ச்சியும் ஒன்று கூடி வதைத்தபடியே கடுமையான குர லுடன் “திலகவதி! திலகவதி!'' என்று அழைத்தான்.

இத்தகைய விபரீத தொனியுடன் ஒரு நாளும் அழைத்துக் கேட்டறியாத திலகவதி மிருந்த நடுக்கலும் பயமும் அடைந்து “இதோ வந்துவிட்டேன்'' என்று கூறிக்கொண்டே வந்து தனக்கு என்ன ஆபத்து வந்துவிட்டதோ தெரியவில்லையே, என்று குடல் நடுங்க நின்ருள். அங்கச்சியம்மாளும் இந்த குரலேக் கேட்டுவிட்டு சற்று தூரத்தில் வந்து நின்ருள்.

கணபதி:—(அங்கச்சி யிருப்பதைக் கவனிக்கவில்லே; திலக வதியை நோக்கி) திலகவதி! நீ என்னுடைய சிநேகிதர்களின் வீட் டில் எப்போதேனும் பணம் வாங்கிக் கொண்டு வந்ததுண்டா! விஷ யத்தை ஒளிக்காது கூறு.—என்று அதட்டிக் கேட்டான்.

திலக:—(வெகு வணக்கமும் பணிவும் கொண்டு பேசத் தொடங்கி) மாமா! மாமி ஏதோ கடிதங்களேக் கொடுத்து சில வீட்டுகளின் விலாசத்தைக் கூறி அவ்விடத்தில் கொடுத்து

அவசரத்திற்கு உதவும் புண்ணியாத்துமாக்கள் சிலரே! அவர்களின் பேருதவியை எக்காலத்திலும் மனம் எண்ணிப் பூரிக்கின்றது. இந்த உதவியால் வயிறெரியும் சத்ருக்களுக்கோ, அவர்களேக் கலைக்கவும் திட்ட வும் புத்தி பிறக்கின்றது. இந்த மந்திரத்திலா மாங்காய் விழும்? வேரூன்றிய அன்பைக் கலைக்க யாராலும் ஆகாது என்பது மறந்துவிடு கின்றதுபோலும்.

விட்டு பதில் வாங்கி வரச் சொன்னூர்கள். அதனுல் நான் சென்று வாங்கி வந்தது உண்டு. நானுக எதுவும் செய்யவில்லை.

கணபதி:—என்ன! என்ன! மாமி கடிதங் கொடுத்தாளா! என்ன கடிதமென்று நீ பார்க்கவில்லையா! எங்கே அவளைக்கூப்பிடு.— என்று கூறி முடிப்பதற்குள், அங்கச்சியம்மாளுக்கு இந்த வார்த்தை பேரிடி விழுந்ததுபோலாய்விட்டதால் வெகு ஆத்திரத்தோடு முன்னே வந்து "ஐயையோ! அனியாயமே! அக்ரமமே! நானு கடிதங் கொடுத்து பணம் வாங்கி வரச் சொன்னேன். இதென்ன அனர்த்தம். ஏண்டி! தடிச்சிறுக்கி! நானு உன் கையில் கடிதமனுப்பினேன். எனக்கு உன் கையில் கடிதமனுப்பி பணம் பெறுவதற்குத் தலைவிதி என்னடி! என் புருஷனில்லையா! புருஷனற்ற முண்டை என்று பார்த்தாயா! நாதா! சத்தியமாக இதென்னவோ சூது வார்த்தைகள் கூறுகிருள். நடந்த விஷயமென்ன? ஐயோ! மனம் பதைக்கிறதே! சொல்லுங்கள்." என்று சரியான வேஷமிட்டு நடித்தாள்.

இந்த அபாண்டமான மொழியைக் கேட்ட திலகவதியின் இதயத்தில் கபீர் என்று பற்றிக்கொண்டு எரிய வாரம்பித்தது. பேதை—அனுதை, திக்கற்ற வனிதை—என்ன செய்வாள் பாவம்! "ஐயோ! மாமீ! இதென்ன இப்படிக் கூறுகின்றீர்களே! நீங்கள் கடிதங்கொடுத்தனுப்பாவிட்டால் நான் ஏன் போகப் போகிறேன். நாய்போல வீட்டில் உழலும் எனக்கு இந்த அதிகப் பிரசங்கித்தனம் எதற்கு? அத்தகைய தைரியம் எனக்கு இஜ் ஜென்மத்தில் வராது. மாமீ! என் மீது வீணை அபாண்ட பழியைப் போடாதீர்கள்." என்று சற்று தைரியமாகக் கூறி முடிப்பதற்குள், அங்கச்சியம்மாள் பிடாரிபோலச் சீறி விழுந்து "ஆ ஆ! என்ன சொன்னுய்! உன் மீது நான் பழி போடுகிறேனு! நீ போடுகிறுயா? அடி சண்டாளி! என் வீட்டிற்கு—என் சொந்த கணவனுக்கு—என் சொந்தத்திற்கு நான் ஏனடி திருட்டுத் தனம் செய்ய வேண்டும்? என் வீட்டிற்கு நான் ராணி! என் புரு

நமக்கு மிகவும் வேண்டியவர்கள் சமயத்தில் உதவி செய்வார்களென்று எதிர்பார்ப்பவர்களிடம் ஏமாற்றமடைய நேரிடுகின்றது. ஆனுல் அதே சமயத்தில் அதிகப் பழக்கமில்லாதவர்கள் தாமே வலுவாக முன் வந்து உதவி புரிகின்றுர்கள். இது என்ன கால விசேஷமோ?

ஷன் ராஜா! அங்ஙனமிருக்க நான் திருட்டுத்தனமாகக் கையெழுத்து போட்டுக் கடன் வாங்க வேண்டிய காரியம் என்னடீ!

எனக்கு அது லாபமா, நஷ்டமா? நான் என்ன மூடமதியினள் என்று நினைத்தாயா! என் குடிக்கு நானே கொள்ளியைத் தேடிக் கொள்வேன் என்று பார்த்தாயா! ஐயோ! என் வயிறு எரிகிறதே! என் குடிக்கு அனர்த்தம் வந்து விட்டதே! அடி பாவி! ஒரு காசு கண்ணால் காண்பது குதிரைக் கொம்பாக விருக்கிறதே! எத்தனை விடத்தில் இவ்வித டண்டா காரியம் செய்திருக்கிறாய். எத்தனை பாறைகளை எங்கள் தலையில் புரட்டி இருக்கிறாய்!'' என்று லபோ திபோ என்று அடித்துக் கொண்டவாறு கணபதியினிடம் திரும்பி, ''ஐயோ! இப்போதேனும் விவரத்தைக் கூறலாகாதா! நீங்கள் சொல் லும் விஷயம் எனக்கு ஒன்றும் தெரியவில்லையே! எங்கே பணம் வாங்கினாள்? என்ன செய்தி? இவள் சில நாளாக இருக்கும் மாதிரி யைப் பார்த்தால் இதற்கெல்லாம் பணம் ஏது என்று நினைத்தேன். இன்றல்லவோ இவளுடைய திருட்டு வெளியாகிறது.'' என்றாள்.

கணபதிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. உண்மையில் குற்றம் திலகவதியின் மீதா, அன்றி அங்கச்சியின் மீதா என்று தெரியாமல் விழிக்கிறான். வீட்டுக்கு அதிகாரியாகிய அங்கச்சியம்மாள் இவ் விதம் தன் குடும்பத்திற்கே அனர்த்தம் நேரும் வகையைச் செய் வாளா! அது ஒப்புக்கொள்ளக் கூடியதா! இது பரியந்தம் ஒரு போதும் அவ்விதம் செய்தறியமாட்டாளே! இந்த பெண்ணே கடி தங் கொடுத்ததாயும் பணம் வாங்கிச் சென்றதாயும் அவர்கள் தாராளமாய்க் கூறுகிறார்கள். உண்மை இன்னதென்று தெரியவில் லையே?'' என்று குழம்பிக்கொண்டே இருவரையும் உற்று உற்றுப் பார்க்கிறான்.

திலகவதியின் நிலைமையை நாம் கூறவேண்டுமா! சிறகொடிந்த

சுறுசுறுப்பாகவும் லக்ஷணமாகவுமுள்ள சிறிய குழந்தைகளைப் பார்க் கையில் அவைகளிடத்தில் நம்மை யறியாது அன்பு உதிக்கின்றது. அப் போது அவற்றின் ஜாதி என்ன, மதம் என்ன என்கிற எண்ணமே உதிப் பதில்லை. அவை பெரிதாகி அநுஷ்டானத்தில் கொண்டு வரும்போதே

பக்ஷிபோலத் தத்தளிக்கின்றாள். "ஐயோ! இந்த அபாண்டம் வேறு எனக்கு வேண்டுமா! ஈசா! இதென்ன சோதனையப்பா!" என்று கலங்கித் தவிக்கின்றாள். அவளுடைய அழகிய இரு விழிகளும் நீர் தாரையைக் கக்குகின்றன. விக்கி விக்கி மூச்சுத் திணறுகின்றது. மெல்ல தன்னை சமாளித்துக் கொண்டு "மாமீ! நானோ பரதேசி! நானோ ஏழை! நானோ திக்கற்ற அனாதை! நானோ தங்களால் வளர்க்கப்பட்ட பயிர். என்மீது வீணான பழி சுமத்துவது சற்றும் தகாத காரியம். தாங்களே வைத்த செடியைத் தாங்களே வெட்டுவதுபோல விருக்கிறது. தங்களுடைய அடிமையாகிய என்னைத் தாங்கள் எத்தகைய இழிய வேலையைச் செய்யும்படியாகக் கட்டளை இட்டாலும் சரி. அவமதித்தாலும் சரி. கேவலம் நாய் என்றே மதித்து வந்தாலும் சரி எனக்குச் சந்தோஷமே! என்மீது படாப் பழியை மட்டும் சுமத்தாதீர்கள். நான் ஒரு பாபமும் அறிய மாட்டேன். மாமா! என்னை இதுபரியந்தம் அன்புடன் போஷித்து ஆதரித்த தாங்கள் என்னை அனியாயம் செய்வதற்கு மட்டும் இணங்காதீர்கள். நான் ஒரு பாபமும் செய்தறிய மாட்டேன். கடவுள் மீது ஆணையாக நான் மாமி கொடுத்த கடிதத்தையே எடுத்துக்கொண்டுபோய் கொடுத்தேன். பணம் வாங்கி வந்து இவர்களிடம் கொடுத்தேன். இவ்விரண்டுதான் எனக்குத் தெரியும்." என்று வெகு வணக்கமாய்க் கூறினாள்.

அங்கச்சியம்மாள் இன்னும் தடபுடலாகச் சத்தமிட்டு இறைகின்றாள். அவளுடைய அப்போதிய நிலைமையைக் கண்ட எவரும் அவள் தன் பணத்திற்கு மோசம் வந்து விட்டதை எண்ணி உண்மையிலேயே கதறுகிறதாகக் கூறுவார்களே யன்றி வேறு விதம் சொல்ல முடியாது. கணபதிக்கோ எந்த பக்கமும் சொல்ல முடியவில்லை. "இது ஏதோ பெரிய மோசம். போர்ஜரி (Forgery) நடந்து விட்டது. இதை எப்படியும் உடனே போலீஸில் தாக்கல் செய்து விட்டுத் தான் மறு காரியம் செய்யவேண்டும்" என்று தீர்மானித்து விட்டான்.

ஜாதியும் மதமும் குறுக்கிட்டு மனத்தில் பலவித எண்ணங்களை உண்டாக்குகின்றன. 'குழந்தைகள் கடவுளுக்குச் சமம்' என்கிற வாக்கு உண்மையாகின்றது.

பிறகு இருவரையும் கோபப் பார்வையுடன் நோக்கி "சரி! குற்றவாளி யாரோ கடவுளுக்குத்தான் வெளிச்சம். நடந்து விட்ட விஷயமென்னவோ பெரிய மோசத்திலும் மோசமாக விருக்கிறது. இதை நான் சும்மாவிடப் போவதில்லை. இப்போதே போலீஸில் தகவலைக் கொடுத்துவிட்டு இந்தக் கள்ளத்தனத்தைக் கண்டு பிடிக்கச் செய்யப்போகிறேன். பிறகு இதில் சம்மந்தப்பட்டவர்கள் அகப்பட்டுக்கொண்டு விழிப்பதைவிட முன்பே தெரிந்து மன்னிப்பு கேட்பது நலம்'' என்றான்.

திலகவதி "மாமா! நான் கடவுள்மீது சத்தியமாக ஒரு பாபமும் செய்யவில்லை. தாங்கள் எது வேண்டுமானாலும் செய்யலாம். எனக்குப் பயமில்லை. மாமி கடிதங் கொடுத்தார்கள்; அதை நான் கொண்டு கொடுத்தேன் என்பது ஒன்றுதான் கூறுவேன்.'' என்று சற்று தைரியமாகக் கூறினாள்.

அங்கச்சியம்மாள் திலகவதியைக் கன்னா பின்னா என்று திட்டியவாறு அவளைப் பற்றி கணபதியினிடம் அனேக குபார் செய்து மனத்தைக் கலைத்து "உடனே போலீஸில் இதன் தகவலைக் கொடுங்கள். ஐயோ! வீட்டிலிருந்து உண்டு, நமக்கே இரண்டகந் தேடிவிட்டாளே! படுபாவி.'' என்று ஒப்பாரி வைத்துக்கொண்டு பெரிதாக அழக் கிளம்பிவிட்டாள். கணபதிக்கு ஆகாரமே பிடிக்கவில்லை. மனத்தில் சொல்ல வறியாத வேதனை கூடி வதைக்கின்றது. தான் இத்தகைய கஷ்டப்பட்டுக் கொண்டேனும் ஏன் உயிர் வாழ வேண்டும். இந்த மாய உலகத்தை விட்டு மறைந்திடும் வழியைக் கட்டாயம் தேடவேண்டியதுதான். என்று திலகவதி புலம்பிக் கொண்டே சிந்தித்த வண்ணம் உள்ளே சென்று, இடிந்து உட்கார்ந்து விட்டாள்.

கணபதிக்கு அன்னத்தின்மீது மனம் செல்லவில்லை. இந்த விஷயமே மனத்தில் பாதித்துக்கொண்டிருந்தது. அவன் அன்று

சிலர் வாயில் வந்தவாறெல்லாம் ஏசிப் பேசிவிடுவதும் பிறகு யாராவது பெரிய மனிதர்கள் "என்ன இந்த மாதிரி முட்டாள்த்தனமாகப் பேசுகிறாயே?'' என்றால் "தெரியாது செய்து விட்டேன்'' என்று

தனக்கு ஏதோ தேக அசுகம் என்று கூறி, ஆபீசுக்கும் போகாமல் எழுதியனுப்பிவிட்டான் இவ்விதமான தப்பு டண்டாக்கள் இன்னும் எத்தனை இடத்தில் நடந்திருக்கிறதோ தெரியவில்லையே! இது ஏதோ பெரிய போதாக் காலத்திற்குத்தான் இவ்விதம் நடந்திருக்கிறது?" என்று வெகு விசனத்திலாழ்ந்தான்.

சற்று யோசித்தான். ஏதோ ஒரு விதமான யோசனை தோன்றியது. உடனே எழுந்து திலகவதிக்குள்ள ஒரு பெட்டியை எடுத்துத் திறந்து பார்த்தான். அதில் புதிய சில்கு புடவைகள் இரண்டு மூன்றும் நிறைய சமிக்கி வேலை செய்த ஜாக்கெட்டுக்கள் சிலவும், இன்னும் ப்ரூச்சு முதலிய அனுவசிய சாமான்கள் சிலவும், இரண்டு 50 ரூபாய் நோட்டுக்களும் இருக்கக் கண்டதுதான் தாமதம் கணபதியின் மனம் தள்ளியது. "இந்த திருட்டுக் காரியத்தைச் செய்தவள் திலகவதிதான் என்பதற்கு ஆக்ஷேபனையுண்டா! பணத்தைக் கள்ளத்தனமாக பெற்று அந்த தொகையைக் கொண்டு இத்தகைய வீண் செலவு செய்துகொண்டிருக்கிறாள்! ஆகா! இருக்கட்டும்." என்று கூறிக்கொண்டே மீண்டும் பார்த்தான், ஒரு சிறிய கடிதம் கிடந்தது. அதைப் படிக்கலானான்.

"என்னுருயிர்க் கண்மணி!

நீ அனுப்பிய நோட்டு வந்து சேர்ந்தது. என்னுடைய ஆபத்து வேளையில் நீ இத்தகைய பேருதவி புரிந்ததற்காக என் மனம் ஆநந்தக் கடலில் அழுந்துகின்றது. கண்ணே! நான் உன்னை நேரில் சந்திக்கையில் விவரம் பேசுகிறேன்.

இங்ஙனம்
உன் காதலன்."

210042

என்றதைப் படித்ததும் கணபதியின் வயிற்றில் பின்னும் அதிகமான எரிச்சலுண்டாகியது. உடனே சிம்மம் கர்ஜிப்பது போல "திலக

மன்னிப்பு கேட்பது. ஆனால் அவர்கள் கண் மறைவில் "நான் இன்னும் அதிக வசையாகவும் பேசியிருப்பேன்" என்பது. இப்படிப் பட்டவர்களின் வார்த்தைக்கு என்றாவது மதிப்பு ஏற்படுமா?

வதி!" என்று கூப்பிட்டான். நடுநடுங்கிப் பூச்சி போல் கிடந்த திலகவதி இக்குரலைக் கேட்டதும் அலறிக்கொண்டு ஓடிவந்தாள். "என்ன மாமா! இதோ வந்துவிட்டேன்." என்று கூறி வணக்கமாக உள்ளே நுழைந்தாள். தன் பெட்டியைக் கணபதி கிளறுவதையும், சில புதிய சேலைகள் வைத்திருப்பதையும் சடக்கென்று கண்ட திலகவதியின் தலை ஒரு தரம் கிறு கிறு என்று சுழன்றது. கண்கள் பஞ்சடைந்தன. பாதி உயிர் போய்விட்டதாகவே ஆய்விட்டாள்.

கணபதி.—அடீ துஷ்டே! நான் உன்னை என்னவோ என்று எண்ணி இருந்தேன். அங்கச்சி சொல்வதெல்லாம் சுத்தப் பொய் என்று அவளைக் கண்டித்து வந்தேன். உனது இத்தனை கள்ளத் தனமும் இந்த காரியத்தில்தான் வெளியாயிற்று. உனக்கு ஒன்றுமே தெரியாதென்று சட்டமாகச் சாதித்தாயே! இந்த புதிய பட்டுச் சேலைகள், ஜாக்கெட்டுக்கள், இந்த சாமான்கள், இந்த இரண்டு நோட்டுக்கள் இவை எல்லாம் ஏது? உன் திருட்டு வெட்ட வெளியாகிவிட்டது. இனி உன் மூட்டைகள் பலிக்காது. உண்மையைக் கூறிவிடு.—என்றான்.

திலகவதி கண்கலங்க, நாக்குழற "மாமா! ஐயோ! எனக்கு ஒரு பாபமும் தெரியாது. இது ஏதோ மோசத்திலும் பெரு மோசமாக விருக்கின்றது. இந்த சாமான்கள் எதுவும் நான் கண்ணாலும் கண்டதில்லை. தாங்கள் காட்டிய பிறகுதான் பார்க்கிறேன். கடவுள் மீது ஆணையிட்டுக் கூறுவதைத் தவிர நான் வேறு எதுவும் கூறத் திறமற்றுளேன். என்னுடைய பெட்டிக்குள் இவைகள் எப்படியோ மோசமாகத்தான் வந்திருக்கவேண்டும். எனக்கு இதைப்பற்றி எதுவுமே தெரியாது. மாமி கடிதம் கொடுத்ததும் சத்தியமாக உண்மை. நான் பணம் வாங்கி மாமி கையில் கொடுத்ததும் உண்மை.

ஒரு காரியத்தைச் செய்ய சகல ஏற்பாடுகளும் செய்த பிறகு கடைசி நிமிடத்தில் சிலர் முட்டுக் கட்டை போடுவது. அதனால் தாமதமானல் வீண் சண்டைக்கிழுப்பது. இதுவே முக்கிய தொழிலாகக் கொண்டுள்ளவர் களுக்கு என்றுதான் நல்ல புத்தி வருமோ?

இந்த இரண்டைத் தவிர வேறு ஒரு விஷயமும் எனக்குத் தெரியாது.'' என்று அபாரமான துக்கத்துடன் புலம்பினுள்.

கண:—ஓகோ! இந்த சாகஸமெல்லாம் எங்கு கற்ருய்! கையும் மெய்யுமாகக் களவைப் பிடித்துவிட்ட பிறகு இனியும் மறைக்க முடியுமா! அங்கச்சியம்மாள் உன்னை சரியாக நடத்தவில்லை. ஏதோ கொடுமையாக நடத்தினுள் என்கிற க்ஷாத்திரத்தினுலேயே நீ இத்தகைய பெரிய காரியத்தைச் செய்துவிட்டு அதையும் அவள் தலையில் புரட்டிவிட நினைக்கிருயே! இது நம்பத்தக்கதா! 4 குழந்தைகளைப் பெற்றவள். குடும்பத்திற்குச் சொந்தக்காரியாகி விட்டவள் இத்தகைய டண்டா காரியத்தைச் செய்யவேண்டிய காரணமே கிடையாதே! இந்த வார்த்தையை யாரும் நம்ப முடியாது. நீ ஏதோ அறியாத்தனமாய்ச் செய்துவிட்டாய் என்பதை ஒப்புக்கொள்ளு.

திலக.—மாமா! தங்களுக்கும் என் மீது பலத்த அவநம்பிக்கையும், அலக்ஷியமும் உண்டாகிவிட்டதென்பது நன்கு தெரிகிறது. எந்த சமயம் என்ன அனுபவிக்கவேண்டுமென்று என் தலையில் எழுதியிருக்கிறதோ, அதே போல அனுபவித்துத்தான் தீரவேண்டும். நான் இக்காரியம் எதையும் செய்தறியமாட்டேன். வீணை பொய்யுரைக்கவும் நான் தயாராகவில்லை என் விதி என்னை எவ்விதம் ஆட்டப்போகிறதோ, அதேபோல முடியட்டும். நான் இதைத் தவிர வேறு எதுவும் சொல்வதற்கில்லை.

கண:—திலகவதி! உன் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் வெகு துணிச்சலாயும், தைரியமாயும், சற்றும் பயமின்றி அலக்ஷியமாயும் வருகின்றன. இதைக்கொண்டே நீ இதைச் செய்தவள்தான் என்று ஸ்தாபிக்கலாம் இப்போதுதான் எனக்கு நினைவிற்கு வருகிறது. இந்த புடவையை நீ முந்தா நாள் உடுத்திக்கொண்டு கோயிலுக்குப் போகவில்லையா! இது ஏது?

தாங்கள் கொடுக்க வேண்டிய பணத்தை மாத்திரம் பல தடவை இழுக்கடித்துப் பிறகு ஏதாவது சாக்குச் சொல்லித் தாமதப்படுத்துவது. ஆனுல் பிறர் தமக்குக் கொடுக்கவேண்டியிருந்தால் பல தடவை நேசிலும், ஆள் மூலமாயும் நிர்ப்பந்தப் படுத்துவது. இது என்ன நியாயமோ?

திலக:—மாமா! இந்த புடவையை நான் கட்டிக்கொண்டது உண்மையே! அன்று நான் என் ஜென்மத்திலேயே கண்டறியாத விதம் மாமி அன்பு காட்டி இதை கட்டிக் கொள்ளும்படியாக வற்புறுத்தினதால் மாமியின் வார்த்தையைத் தட்டாமல் இதை உடுத்திக்கொண்டேனே யல்லாது நாயினும் கடை கெட்ட எனக்கு இதை வேறு யார் கொடுக்கவிருக்கிறார்கள்?

இதைக் கேட்டுக்கொண்டே வேகமாக ஓடி வந்த அங்கச்சியம்மாள் "ஐயோ! அம்மாடீ! இதென்ன வயிற்றெரிச்சக் கொள்ளை? நாதா! பாம்பை வைத்து வளர்த்த கதையைப்போல இந்தப் பாவியை வைத்து வளர்த்ததன் பலன் நமக்குக் கிடைத்து விட்டதே! இந்தப் புடவையை நானா கொடுத்து கட்டிக்கொள்ளச் செய்தேன். ஐயோ! இந்த புடவை நம்ம வீட்டிலேயே இல்லையே! இவள் இதை கட்டிக்கொண்டு ஜம்பமாகப் போகையில் பார்த்தேன். வந்தவுடன் இது ஏது என்று கேட்கலாம் என நினைத்தேன். எனக்குள்ள பல வேலைகளின் தொந்தரவில் மறந்துவிட்டேன். ஒவ்வொரு காரியத்தையும் இப்பாவி செய்துவிட்டு என் தலையில் போட்டுவிட எப்படித் துணிபுடன் கற்றாளோ தெரியவில்லையே! ஏண்டீ! தடிச்சிறுக்கி! நானா உனக்கு சேலையைக் கொடுத்தேன்? உண்மையைக் கூறடீ!" என்று கர்ஜித்தாள்.

ஒரு திக்கில் துஷ்ட மிருகம். மற்றொரு திக்கில் கோரமான நெருப்பு. வேறொரு திக்கில் பெரும் வெள்ளம். பின்னொரு திக்கில் கொடிய விஷத்துடன் கூடிய நாக சர்ப்பங்கள் ஆக நான்கும் ஒரே வேளையில் சுற்றிக்கொண்டு விட மத்தியில் அகப்பட்டுக் கொண்ட மனிதனின் கதி என்னவோ அதைப்போன்று நூறு மடங்கு அதிகரித்த நிலைமையில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் திலகவதியின் கதி எவ்விதந்தானிருக்கும். தான் இந்த அபாண்டத்திற்கு என்ன விதமான பதில் கூறுவதென்று தோன்றவில்லை. தன்மீது என்றுமே த்வேஷம் பாராட்டித் தன்னைப் பலவிதத்திலும் துன்

நிரபராதியின் மீது வீணான படாப் பழியைச் சுமத்துபவர்கள் தமது தொண்டைக்கு எட்டிய மட்டும் கூச்சலிடுகிறார்கள். அவர்கள் தமது பொறுமையை இழக்காது நிதானமாகப் பதில் சொல்கிறார்கள். ஆனால்

புறுத்திக்கொண்டு வந்தது போதாதென்று ஒரே அடியாக ஒழித்து விடுவதற்கே இந்த சதியாலோசனையை அங்கச்சியம்மாள் செய்து விட்டாள் என்று திலகவதியின் மனத்தில் நன்ருகத் தெரிந்துவிட்டது. அவளே எல்லாக் காரியத்தையும் செய்துவிட்டுக் கடைசியில் தான் ஒன்றுமறியாதவள்போல விலகிக்கொண்டு, தன் தலையில் பாறையைப் புரட்டிவிடத் துணிந்து விட்ட செய்கையை நன்குணர்ந்த திலகவதி குனிந்த தலையை நிமிரவில்லை.

தான் நிரபராதி, குற்றமற்றவள் என்பதை உண்மையாக நம்பக்கூடிய மாதா பூமிதேவி யொருத்திதான் என்று திட்டமாக எண்ணித் தன் கண்ணீரை பூமிதேவிக்கு நீராடும் நீராகப் பெருக விட்டவண்ணம் பதுமைபோல நின்ருள். இதற்குள் அங்கச்சியம்மாள் திலகவதியின் பெட்டியில் இருக்கும் சேலை முதலியவற்றைத் திடீரென்று பார்த்து "ஐயோ! அனியாயக்கொள்ளையே! நாதா! இதென்ன சிர் வகைகள்! இந்த சேலைகளை எல்லாம் எப்படி வாங்கினுள்! ஐயோ! வீட்டிற்குள்ளிருந்தபடியே எத்தனை விபரீதங்களை எல்லாம் செய்திருக்கிருள்? இந்தப் படுபாவியின் செய்கையினுல் நாம் குழந்தையும் குட்டியுமாகச் சந்தியில் நிற்கவேண்டி வந்துவிட்டதே! நாதா! நான் அப்போதே சொல்லவில்லையா! தீய நடத்தையும், தடியன்களின் நேசமும் இவளுக்கு ஏற்பட்ட பிறகு இவளை நம் புவதாவது. நமக்கே தான் அது அனர்த்தம் என்று நான் முட்டிக் கொண்டேனே!

ஆ!...நாதா! இப்போது நினைவிற்கு வருகிறது. இவள் சில தினங்களுக்கு முன்பு வீதி ஜன்னல் வழியினுல் ஏதோ ஒன்றை வீசி எறிந்தாள். அதை நானும். என் தம்பி சோமுவும் பார்த்துக் கொண்டே வந்துவிட்டோம். இவள் வீசி எறிந்த உடனே ஒரு தடியன் அதை எடுத்துக்கொண்டு போய்விட்டான். இவள் எறிந்தது பணமாகத்தானிருக்கவேண்டுமென்று இப்போதல்லவோ தெரி

கேட்பவர்களோ அதிக தொனியுடன் பேசுபவர்கள் பக்கம்தான் நியாயமென்று நினைக்கிருர்கள். இக்கால விபரீதங்களில் இதுவும் ஒன்று போலும்.

கிறது. "காவலிருப்பவனே கள்ளன்" என்ற பழமொழி சரியாகிவிட்டதே! ஐயோ! என்ன செய்வது? நமக்குப் போதாக் காலத்தின் கொடுமையோ இது." என்று பெரிய சத்தமிட்டு, ப்ரலாபிக்கத் தொடங்கினள்.

திலகவதி வெகு பரிதாபகரமாக அவ்விருவரையும் நோக்கி "மாமீ! மாமா! தாங்கள் என்னை எத்தனை திட்டிய போதிலும் சரி. எத்தனை விதமான கள்ளி என்று எண்ணிய போதிலும் சரி. என்னுடைய நிரபராதித் தன்மையைக் கண்டு உண்மைக்குத் தக்க பலன் கொடுக்கும் ஒருவன் இருக்கிறன். இனி நான் என்ன சொல்ல முடியும், செய்ய முடியும்? எல்லாம் ஈசன் செயல். நான் ஒரு விதமான பாபமும், த்ரோகமும், மோசமும் செய்யவில்லை என்று முக்காலும் சத்தியமாகக் கூறுவேன். என்னைத் தாய் தந்தையர் போல எடுத்து வளர்த்த தாங்களே இதை நம்பினலும் சரி. நம்பாவிடினும் சரி. என் முடிவு கடவுள் கையிலிருக்கிறது. அது போல நடக்கிறது. என்னுடைய இத்தனை இளம்பிராயத்தில் நான் உலகத்தின் இயல்பு இதுதான் என்பதைக் கண்டுகொண்டேன். வீணே நான் பேசிப் பயன் யாது?" என்று கூறி முடிப்பதற்குள் அங்கச்சியம்மாள் "ஓகோகோ! பெரிய தத்வஞானி, வேதாந்தி, பாரமார்த்தீக சிகாமணி உனக்குத் தெரிந்த பாடத்தைப் படித்து உன்னுடைய அபாரமான மூளையைக் காட்டி இந்த அழுக்கை மறைக்க இது ஓர் தந்திரம் செய்ய வந்துவிட்டாயா! உன்னைப்போல படிப்பது பாகவதம் இடிப்பது பகவான் கோயில் என்ற வேதாந்தம் எங்களுக்கு வேண்டாம். எனக்கும் வேதாந்தம் செவ்வனே தெரியும். யாரிடமடீ இந்த தக்டா புக்டா வேஷம் போடுகிறுய்? ஐயோ! ஒன்று இரண்டா! எத்தனை நூறு ரூபாய்கள்? நினைத்தாலும் கபீர் என்கிறதே!" என்று பெரிய ஆட்டம் ஆடினள்.

சிலர் பூஷிக்க ஆரம்பித்தால் ஒரேயடியாக ஆகாயத்தில் தூக்கி வைப்பது; தூஷிக்கையில் பாதாளத்தில் கொண்டு புதைத்து விடுவது; இரண்டுமில்லாத சமயத்தில் ஊமை போல் மௌனமாயிருப்பது. இம்மாதிரி ஒவ்வொரு விதத்திலும் தராதரமின்றி அதியாக இருப்பதில பயன் யாது?

கணபதி கண்களில் நெருப்புத் தணல்களைக் கக்கியவாறு, "உம்; உன்னுடைய முடிவு கடவுள் கையில் இருக்கிறதா! சரி. அந்த கடவுளே நேரில் வந்து உன் முடிவைக் காட்டட்டும். நல்லதற்கு இது காலம் அல்ல. இவ்வளவு தைரியத்துடன் பேசுகையில் நீ எதையும் துணிந்து கட்டாயம் செய்திருப்பாய் என்றே என் மனம் தீர்மானமாய் நம்புகின்றது. பிறகு உன் விதியைப்போல ஆகட்டும். இதோ இந்தக் கடிதம் ஒன்றே எனக்கு அத்தாட்சியாயிற்று" என்று அதைப் படித்துக் காட்டினான்.

இந்த பேரிடியை இது பரியந்தம் அறியாத திலகவதி நெருப்பை மிதித்தவள் போலத் துள்ளினாள். 'ஐயோ! என்னை ஒரே விதமாகக் கொலை செய்திருப்பின் நான் சந்தோஷமாக விருப்பேனே! 'நீ இருப்பது எனக்குப் பெருந் தொல்லையாக விருக்கிறது. நீ எவ் விதமேனும் தொலைந்து விடு.' என்று எனக்குக் கூறி யிருந்தால் நான் என் பிறவியில் என்றும் கண்டிராத ஆநந்தத்தோடு என் ஜீவனை மாய்த்துக் கொண்டிருப்பேனே! அதை விடுத்து என்னை இத்தனை விதமான சித்திரவதையா செய்யவேண்டும்?

மாமீ! என்னைத் தாங்கள் விலக்குவதற்குச் சகஜமான ஒரு வார்த்தை போதுமே! இத்தனை அபாண்டமான பழிகளை என் தலை மீது சுமத்தி என்னுடைய இத்தனை இளம் பிராயத்தில் நான் தங்களிட மனுபவித்த கஷ்டங்கள் போதாதென்று அவமானம், அபாண்டம், தண்டனை, சிறைவாசம் முதலிய பகுமானங்களையும் பெற்று அனுபவித்துப் பின் துலையட்டும் என்று எண்ணினீர்களா! ஐயோ! கடவுளே! என்னை ஏன் பிறப்பித்தாய்! இவ்விதம் எல்லாம் ஆட்டவோ என் விதி தூண்டியது" என்று கூறிக்கொண்டே அங்கு நிற்காமல் நேரே சமையல் கட்டிற்குப் போய்க் குப்புற விழுந்து விட்டாள்.

இனி தான் என்ன செய்வதென்கிற பெருங் கவலையினால் அபாரமான திகிலடைந்து குழம்பிப் போய்விட்டாள். இனி தான்

ஒன்றுக்கு நான்கத்தனையாக விலை போட்டுவிட்டுத் தனக்கு அதிகப் பணம் பாக்கி யிருக்கிறதென்று தமுக்கடிப்பதே சிலரது வழக்கம். ஊரில் சாதாரணமாக என்ன விலை யென்பதை ஒருவரும் விசாரிக்காது பணங் கொடுத்து விடுவார்களோ என்பதை நினைப்பதில்லை.

உயிருடனிருந்தால் பெருத்த அவமானத்திற்கு ஆளாக நேரும் என்கிற எண்ணம் அவள் மனத்தில் தீவிரமாக உதயமாகி விட்டது. தனது முடிவு காலத்தின் ஏஷியங்களே இப்படி வந்து விட்டன என்று நன்குணர்ந்து கொண்டாள். தாங்கமாட்டாத துக்கம் தொண்டையை அடைக்கின்றது.

ஹா! ஈசா! என்னை இம்மட்டுடனுவது உன் பொன்னடியில் சேர்த்துக் கொள்வாயா! அன்றி இன்னும் பெரும் பாறையை என் தலையில் புரட்டப் போகிருயா! ஐயோ! பாவத்தைச் செய்து புவியில் ஜெனிப்பதுண்டு. என்னைப்போன்ற சண்டாளியும் ஜெனித்திருப்பார்களா! சுகுமாரா! சுகுமாரனுன உன் மனமும், வாழ்க்கையும் அனியாயமாக என் பொருட்டுப் பாழாகி விட்டனவே! இந்த அபாண்டமான மொழியை நான் எவ்விதம் உன் காதில் போடுவேன்? உன்னை இதுபரியந்தம் நான் வாட்டுவது போதாமல் இந்த முடிவின் கேட்டையும் எங்ஙனம் உரைப்பேன்? என் மனம் சகிக்கவில்லையே! உன்னுடன் ஒரு வார்த்தையும் கூறுமல் என்னுயிரை மாய்த்துக்கொண்டுவிடலாமா என்று நினைத்தால் அதுவும் பயங்கரமாகத் தோன்றுகிறதே! நான் இப் பட்டப்பகலில் உன்னை எங்கு காண்பேன். எவ்விதம் என் கதியை உரைப்பேன்? என்ன செய்வேன். மகா அபாக்யவதியான என்னைக் காதலித்ததன் பயன் இதுவோ! ஐயோ! என்னைப்பற்றி நான் விசனிக்கவில்லை. மகா வீரனும், உத்தமனும், வருத்தமறியாத வாலிபனுமாகிய சுகுமாரனின் கதி யாதாகும்? ஏற்கெனவே புண்பட்டு வருந்திக் கிடக்கும் கோமளவல்லியம்மாளின் கதி எத்தகையதாகும்? தாயும் தந்தையும் உயிருடனிருந்தும் பறி கொடுத்தது போலான குழந்தை மாதவனின் கதி யாதாகும்?

ஐயையோ! சண்டாளி என்னொருத்தியால் எத்தனை பேருக்குத் துன்பம்! எத்தனை உயிருக்கு ஹானி! எத்தனை கஷ்டங்கள்! நினைத்

சொற்ப பணத்திற்காக வீண் வழக்காடி, வம்பு பேசி, மாதக் கணக்கில் தாமதித்துப் பெற்றுக் கொள்பவர்கள், முதலிலேயே நல்லதனமாக நடந்துகொண்டிருந்தால் இன்னும் அதிகமான பணம் மனஸ்தாபமின்றி பெற்றுக் கொண்டிருக்கலா மென்பதைக் கவனிப்பதில்லை.

தாலும் கபீர் என்கிறதே! சுகுமாரா! என் இன்ப துரையே! இணை யற்ற காதலா! சர்க்கஸ்காரனும் கண்டு வியக்கக்கூடிய உன்னத வீர புருஷா! இப்பாதகியை ஏன் நீ காதலுற்றாய்! ஐயோ! என்ன செய் வேன்? ஆயிற்று. இரண்டில் ஒன்று இன்றைக்குள் முடியாவிடில் என் கதி சந்தி சிரித்துவிடும். இக் கலிகாலம் நியாயத்தின் வசமில்லை. இந்த காலத்தின் கோலத்தைக் காட்டிவிட்டது. இனி யோசிப்பதில் பயன் யாது? ஈசா! என் முடிவையேனும் சீக்கிரம் ஆகும்படி அருள் வாய்." என்று தனக்குள் பலவிதமாக யோசித்துக்கொண்டே, சற்று படுத்திருந்தாள்.

உடனே எழுந்தாள். சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் அளவு என்பது போல அவளுக்குத் தன்னை யறியாதபடி தைரியம் ஒன்று பிறந்து விட்டது. நேரே மேன்மாடிக்குச் சென் றாள். சுகுமாரன் இருக்கும் அறைக்குச் செல்வதற்கு இங்கிருந்தே வழி இருக்கின்றது. அவ் வழியினால் திலகவதி ஒரு நாளும் அவ் வறைக்குச் சென்றறிய மாட்டாள். அத்தகைய நங்கை அன்று அவளை மிஞ்சிய விசனத்தினாலும் துணிச்சலினாலும் தான் என்ன செய்கிறோம், எங்கு செல்கிறோம் என்பதைச் சற்றும் கவனியாது சுகுமாரனின் அறைக்குச் சென்றாள்.

அப்போது சுகுமாரன் பகல் போஜனம் செய்துக் களைப்பினால் சற்று படுத்திருந்தான். அவன் சற்றும் எதிர்பாராத விதமாக திலக வதி பதைத்த முகத்துடன் உள்ளே சென்று 'சிறு நித்திரையில் இருக்கும் சுகுமாரனை எழுப்புவதா, வேண்டாமா?' என்று சற்றுத் தியங்கினாள். நான் இங்கு வந்திருப்பதைக் கணபதியே இனி கவ னிக்கக்கூடும். ஆகையினால் நாம் கட்டாயம் எழுப்பி விஷயத்தைக் கூறிவிட்டுச் செல்ல வேண்டுமென்று தீர்மானித்தாள்.

சுகுமாரனின் அருகில் சென்று தாமரை மலரினும் மிருதுவான தன்னிரு கரத்தினாலும் சுகுமாரனின் இரு கரங்களையும் சேர்த்துப்

ஒரு காரியத்தைச் செய்வது சரியில்லை யென்பவர்கள் அதனால் அதிக பணம் வருமென்று தெரிந்தால் அப்போது மாத்திரம் அவசியம் செய்யலா மென்கிறார்கள். முதலில் சரியில்லாதது அப்போது சரியாகி விடுமா? பணம் தான் பிரதானம்?

பிடித்து "அன்பரே! எழுந்திருங்கள். பாவி என்னால் நிம்மதியான நித்திரைக்குக்கூடப் பஞ்சம் வந்து விட்டது. மகா பயங்கரமான கொடிய சங்கதி யொன்றைத் தெரிவிக்கவே பாவி யான் இங்கு வந்துள்ளேன்." என்று கூறும்போதே அவள் கண்களிலிருந்து நீர் முத்து முத்தாய்ச் சுகுமாரனின் மார்புமீது பனித்துளிபோல விழுந்தன.

இந்த எதிர்பாராத சம்பவத்தைக் கனவென எண்ணிய சுகுமாரன் அலறித் திடுக்கிட்டு எழுந்தான். அவனுடைய இஷ்ட தேவதை கண்ணீர் மாரியுடன் நிற்பதை அறிந்ததும் ப்ரமிப்பும் திகைப்பும் கொண்டு "ஹா! கண்மணி! திலகவதியா! என்ன இது? ஏன் புலம்புகிறாய்? என்ன விஷயம். ஒன்றும் விளங்கவில்லையே!" என்று கூறியவாறு அவளைக் கட்டித் தழுவி, இரு விழிகளையும் துடைத்துத் தன் பக்கலில் அமரச்செய்து, "கண்ணே! இன்ப வடிவே! நடந்த செய்தி யாது? நான் பலதரம் அழைத்தும் இவ்விடத்திற்கு வர மறுத்துவிட்ட நீ இப்போது தானாகவே வந்திருப்பதைப் பார்த்தால் நன்மைக்கென்றும் தெரியவில்லை, தீமைக்கென்றும் விளங்கவில்லை. என்ன செய்தி! என்னுருயிரே! ஏன் உன் தேகம் நடுங்குகிறது?" என்று பல கேள்விகளைக் கேட்டான்.

திலக:—இன்றே கடைசி நாள் என்று என் முடிவைக் கடவுள் காட்டிவிட்டார். ஆதலால் நான் என்னுவல் தீர 'ப்ராணநாதா!' என்று அழைத்துவிடுகிறேன். தலைக்கு மிஞ்சிய ஆக்கினை இல்லை. உடைக்கு மிஞ்சிய தரித்திரமில்லை என்பது உலகப் பழமொழி. நான் பயந்து பயந்து என் பிறவி இன்னதென்பதையே அறியாது அன்னமிடுபவரிடத்தில் அடிமைபோல என் காலத்தை இதுபரியந்தம் கடத்தி வந்தேன். என் இன்ப வாழ்க்கையில் அபாரமான திகிலும், பயமும் கொண்டு தங்களைக் காணவும் பேசவும் அஞ்சினேன். என் மனத்திற்குள் நான் அடைத்து வைத்துள்ள துன்

சிலர் பேசுகையில் தமக்கு ஒரு விஷயமும் தெரியாதது போலாரம்பித்து மற்றவர்களின் வாயிலிருந்தே சகலத்தையும் வரவழைக்கின்றார்கள் இப்படிப்பட்டவர்களிடம் வெகு ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டு மென்பதை மற்றவர்கள் அறிவதில்லை.

பக் குவியலுக்கு ஓர் பெரிய அரசனின் நிதிக் குவியலும் ஈடாக மாட்டாது. அத்தனைத் துன்பங்களையும் சகித்துக்கொண்டு நான் உண்மைக்கும் சத்தியத்திற்கும் பாடு பட்டு வந்ததற்கு என்னைக் கடவுள் போதுமான வரையில் சோதித்துவிட்டார்.

இனி ஏதும் பாக்கி இல்லை. இன்ப துரையே! தாங்கள் என்னை யோர் சாதாரண மனுஷியாக எண்ணிக் காதல் கொண்டீர்கள். நான் இந் நிமிடம் முதல் சாதாரண மனுஷியல்ல. பெரும் மோசக் காரி. உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்த த்ரோகி! கள்ளக் கையொப்பமிட்ட கபடி. கற்பு நெறி தவறிய கசடை என்று இத் தனை விதமான பட்டங்களைச் சூட்டி அவற்றிற்கு ஏற்ப பல நிதர்சன உதாரணங்களும் சற்று முன்பே என்னை இதுகாறும் ஆதரித்த வர்கள் காட்டிவிட்டார்கள். (நடந்த விஷயங்களை எல்லாம் கூறி)

என்னுயிக்கமுதே! என் விதி எப்படி முடிந்தது பாருங்கள். இனி நான் அரைக் கணமும் உயிருடன் புவியில் இருந்தால் என் னைப்போல பஜீத் படப்போகிறவர்கள் யாரும் கிடைக்க மாட் டார்கள். அதோடு என்னைக் காதலித்ததற்காக இந்தப் பாவியின் குற்றத்தில் கட்டாயம் தாங்களும் சம்மந்தப்பட்டதாக விதி யமைந்து விடுமென்று என் மனத்தில் ஏதோ ஓர் அசரீரி வாக்கு கூறு கிறது. ஆதலால் நான் இனிமேல் எக் காரணத்தையும் முன்னிட்டு உயிர் தரிக்கலாகாது. நான் எவ்விதமாவது தற்கொலை புரிந்து உயிர் விட்டுவிட வேண்டியதே என் முடிவாகி விட்டது. நான் இந்த செய்தியைத் தங்களிடம் தெரிவிக்காது செய்துவிட நினைத்தேன். என் மனம் அதற்குச் சம்மதிக்கவில்லை. 'நீ அவரிடம் சொல்லிவிட் டுச் செய்' என்று என்னுள்ளிருந்து ஏதோ சொல்லியது. அதனுல் வந்தேன்.

என் துரையே! என்னுடைய முடிவைக் குறித்து எனக்கு என்றுமில்லாத தைரியம் பிறந்துவிட்டது. இப்போது நான் இங்கு வந்ததை எங்கள் வீட்டினர் கட்டாயம் பார்த்துக்கொண்டே இருப்பார்கள். சாகத் துணிந்தவர்களுக்கு இனி சாண் ஆனுல் என்ன? முழமானுல் என்ன? மைலானுல் என்ன? எல்லாம் ஒன் றல்லவா! இதற்காக எனக்கு வேறு தண்டனை இல்லை. என் மன மாரக் காதலித்த தெய்வத்தின் பாத பூஜை செய்துப் பின் உயிர் துறப்பது எனக்குப் பெரும் புண்ணியமென்று தோன்றியது. என் பாவிப் பிறப்பில் இந்த ஒரு ஆநந்தமேனும் கிடைத்தால் போதும் என்று துணிபுடன் எண்ணித்தான் வந்து விட்டேன். இதில் குற்

ஒவ்வொரு மனிதருடைய வாழ்க்கையிலும் சினேகிதர்களாலும், சத்துருக்களாலும் ஒரு முக்யமான விஷயம், முக்யமான தேதியில் பதி வாகி அவர்கள் இறக்கும் வரையிலும் அந்த நாளை நினைப்பூட்டிய வண் ணமே இருக்கும். அந்த நாளின் நிகழ்ச்சியே ஓர் தனித்தது.

றமோ, குறையோ எதையும் மன்னிக்க வேண்டும். என்னுடைய விஷயத்தையும் முடிவையும் கூறிவிட்டேன். இனிமேல் நான் விடை பெற்றுக் கொள்கிறேன்.'' என்று கண்ணீர் பெருகியவண்ணம் கூறினாள்.

பெரிய ப்ரசங்கம் போலக் கூறும் இவ் வார்த்தைகள் ஒவ்வொன்றும் சுகுமாரனின் மனத்தில் ஆணி அறைவதுபோலச் சுறுக்கு சுறுக்கு என்று தைக்கின்றது. இவளுடைய வார்த்தையில் குறுக்கே பேச எண்ணுகிறான். எனினும் இவளுடைய உணர்ச்சியின் எல்லையைக் கண்டு கொள்வதற்குத் தான் சற்று பொறுமையை வகித்துக் கேட்டு வந்தான். இவ் வார்த்தைகள் முடிந்ததும் அவனால் அடக்கக் கூடாத துக்கமும், திகிலும் உண்டாகி விட்டன.

திலகவதியை இறுகத் தழுவிக் கொண்டு, "ஹா! என்ன சொன்னாய்! என்ன முடிவு கட்டிக் கொண்டாய்? கண்மணீ! என்னுருயிர் இன்ப மணீ! உன் பேரிலா கள்ளக் கையொப்பமிட்டதாகப் பழி சுமத்தி இருக்கிறார்கள்! ஐயோ! விபரீத புத்தியே! காதலீ! நான் ஒரு ரகஸியம் கண்டு பிடித்துள்ளேன். அதை உன்னிடம் கூறச் சிறிது தியங்கினேன். இப்போது கூறிவிடுகிறேன். அதைக் கேட்டு நீ சற்றும் பயப்படாதே. தைரியத்தை இழக்காதே. முதலில் நான் உனக்கு ஓர் உறுதி செய்து கொடுக்கவேண்டும். அதாவது எத்தகைய கஷ்டங்கள், என்ன விதமான ஆபத்துக்கள் உனக்கு நேரிட்ட போதிலும் என்னுயிரைக் கொடுத்து உன்னைக் காப்பாற்றும் தைரியத்தை—பொறுப்பை, கடமையை—கடவுள் எனக்குக் கொடுத்திருக்கிறார். இது சத்தியம். நான் கூறுவதை நம்பு. எந்த காரியத்திற்கும் மனத்தில் தைரிய லக்ஷ்மியின் துணை வெகு அவச்யம் வேண்டியது.

கண்மணீ! மனத்தைத் தளர விடாதே! சொல்வதைக் கேள். உன்னை உன் போஷகர்கள் இந்த குற்றத்தில் மட்டும் சம்மந்தப் படுத்தி இருக்கிறார்கள் என்று நினைக்காதே! இது ஓர் பெரியதல்ல. அந்த பாதகி, கிராதகி இருக்கிறாளே! அவள் உன்னை என்ன செய்ய எண்ணி இருக்கிறாள் தெரியுமா! என் காதல் கனியே! உன்னையோர் வஞ்சகனுக்கு விற்று விடவோ, அன்றி ஓர் க்ஷுத்ர தேவதைக்கு உயிருடன் பலி கொடுக்கவோ தீர்மானித்து விட்டாள். இந்த ரகஸியத்தை.........

நமக்கு வேண்டிய மனிதருடன் பேசுகையில் பல மணி நேரமும் சில நிமிடம் போலத் தோன்றுகிறது. வேண்டாதாராயின் நிமிடமே யுகமாகி விடுகிறது. அதேபோல க்ராமபோன் ப்ளேட்டுக்கள் பிடித்தமானதாயும் நன்ருக அமைந்ததாயும் இருப்பின் மூன்று நிமிடம் மூன்று விளுடி போலாய்விடுகிறது. உபயோகமற்றதாயின் மூன்று மணிபோல விருக்கிறது.

திலகவதி இடை மறுத்து, "ஹா! என்னை அன்னியனுக்கு விற்கவா துணிந்து விட்டாள்! ஐயோ! இந்த கோரமும் எனக்கு ஒன்று மிச்சமிருந்ததா! என் இன்ப துரையே! (சுகுமாரனின் மோவாயைப் பிடித்துக்கொண்டு) என்னை இனி நிர்ப்பந்தம் செய்யாதீர்கள். இப் பாவியின் சரீரத்தினுல்—ஜென்மத்தினுல்—யாருக்கும் உபயோகமே இல்லை என்று எண்ணினேன். ஓர் பர தேவதைக் காவது உபயோக மிருப்பதாக இப்போது தெரிகின்றது. என்னைச் சந்தோஷமாகப் பலி கொடுத்து விடட்டும். நான் என் துன்பம் நீங்கி உயிரை விடுகிறேன். பிறகேனும் இன்ப மடைகிறேன். என் காதலா! நான் கேவலம் உதவாக் கட்டை என்பதைத் தாங்கள் பல தரமும் நன்கு கண்டும் இனி என்னையொரு பொருட்டாக எண்ணுவது தகாது. நான் துன்பமற்று— என் கஷ்டம் வடிந்து — சந்தோஷமடைந்தால் அதனுல் தங்களுக்கும் சந்தோஷமல்லவா! என்னை இத்தனை தூரம் செய்ய நினைத்துவிட்ட பின்னர் ஒரு கணமும் உயிருடன் நான் வாழக் கண்டு சகிக்கமாட்டார்கள். இது சத்தியம். என்னுயிர் எந்த விதமாகவேனும் மறைய வேண்டும் என்ற ஒரே நோக்கம்தான் அந்த அம்மாளுக்கு இருக்கிறதென்பதை ப்ரத்யக்ஷமாகக் காட்டிவிட்டார்கள். ஆதலால் என்னை அன்னியனுக்கு விற்று என்னைச் சித்திரவதைக்கு ஒப்பாகப் பலி கொடுப்பதைவிட ஓர் தேவதைக்கு உண்மையில் பலி கொடுப்பதுபற்றி நான் மிகவும் சந்தோஷமே படுகின்றேன்." என்று கூறி முடிப்பதற்குள் சுகுமாரன் "கண்மணி! இரு இரு. அவசரப்படாதே! சற்று பொறுமையோடு பேசு. உன் மனம் எவ்வளவு கொதிக்கிறது. எத்தகைய விசனமாகிய கவசத்தில் நீ மறைந்திருக்கிறாய் என்பதை நானறிவேன். ஆதலால் உன்னிலைமையைப் பற்றி நீ விவரிக்க வேண்டாம். உன்னைப் பலி கொடுத்துவிட்டு நான் உயிருடன் வாழ்வதா! உம்! கண்ணு! இந்த ஜென்மாவில் இல்லை. அந்த ஆசையை விட்டுவிடு. நான் உயிருடன் இருக்கும் பரியந்தம் உனக்காக ஒரு கை பார்க்காமல் விடமாட்டேன். உன் மனத்தில் உள்ள ஆத்திரத்தை சற்று அடக்கிக்கொள்ளு.

அங்கச்சியம்மாளும் இன்னொரு சோதாத் தடியனும் பேசிக் கொண்டதை நான் கவனித்தேன். அப்போதுதான் உன்னையவர்கள் என்ன செய்ய நினைத்திருக்கிறார்கள் என்ற சதியாலோசனையின் ரகஸியத்தை அறிந்தேன். உடனே அந்த ஆசாமி யார் என்பதை

சிலருக்கு முக்கியத்திலேயே மறதி அதிகம். எந்த சமயம் யாரிடம் எப்படி பேசவேண்டு மென்பதை சம்பாஷணை நடக்கும் தோரணையில் கூட நினைவின்றி அச்சமயத்தை நழுவவிட்டுப் பிறகு பிறர் எடுத்துக் கூறுகையில் நாக்கைக் கடிப்பது. இதில் என்ன உபயோகம்?

அறியும் பொருட்டு அவனைப் பின் தொடர்ந்தே சென்றேன். அந்த மனிதனைப் பார்த்தால் சாதாரண மனிதனாகத் தோன்றியது. அவன் எந்தவிடத்தில் செல்கிறான் என்பதைத் தெரிந்துகொண்டு மேலே காரியம் செய்யலாம் என்று எண்ணிச் சென்றேன்.

அந்த ஆசாமி மைலாப்பூருக்குச் சென்று அந்த ஊர் ச்மசானத்திற்குள் நுழைந்தான். அப்போது மணி இரவு சுமார் 9 இருக்கும். நான் எவ்வளவு தைரியமாக அவனுடன் பின் தொடர்ந்து சென்றபோதிலும் அக்காலத்தில் பயங்கரமான ச்மசானத்திற்குள் நுழைவதற்கு எனக்கு வெகு அஞ்சிகையாக விருந்தது. வெளிப்புறமே சற்று நேரம் நின்று பார்த்தேன். அந்த ஆசாமி வெளியில் வரவில்லை. ஆதலால் நான் அதற்குமேல் அங்கு நிற்காமல் திரும்பிவிட்டேன்

ச்மசானத்திற்குள்ளேயே தைரியமாகப் போகக்கூடிய அந்த ஆசாமி யாராகவிருக்கலாம். ச்மசானத்திற்குள் இரவில் தைரியமாகச் செல்பவர்கள் மந்திரவாதிகள், சூனியக்காரர்கள் முதலியவர்கள் தான் என்று பெரியோர் கூறக் கேட்டதுண்டு. அந்த விஷயம் என் நினைவிற்கு வந்தது. இந்த மனிதன் அத்தகைய வகைகள் எதிலோ சேர்ந்தவனாகத்தான் இருக்கவேண்டும் என்று என் மனத்தில் சடக்கென்று தோன்றியது. உடனே எனக்கு ஏதோ எண்ணமும் தோன்றிவிட்டது. இதை நாம் வெறுமனே விடக்கூடாதென்கிற தீவிரமான பிடிவாத புத்தியும் தோன்றியது.

அங்கிருந்து நேரே நான் ஓர் டாக்ஸி மோட்டார் அமர்த்திக் கொண்டு துப்பறியும் வீரசிங்கமாகிய ராஜாராம் நாயுடுவின் வீட்டிற்குச் சென்றேன். அப்போது இரவு 10 மணி இருக்கும். அவர் போஜனம் செய்துவிட்டு அன்றைய தினசரிப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தார். நான் அவரைக் கண்டு நானறிந்த சகலமான விஷயங்களையும் ஒன்று விடாமல் கூறிவிட்டேன்.

கண்மணி! நான் முன்பொரு சமயம் உன்னிடம் நாம் காதலித்த விஷயத்தை வெளியில் கூறலாகாது என்னும் விருதம் எடுத்துக்கொள்ளலாம் என்று கூறினேனல்லவா, அந்த ப்ரதிக்ஞையிலிருந்து நான் பிறழ நேர்ந்துவிட்டது. அந்த புண்ணிய புருஷரிடத்தில் உண்மையை ஒளித்துவிட முடியாது. அவ்வாறு செய்வதில் நமக்கு அனுகூலமில்லை. ஆதலால் அவரை நான் கடவுளாக மதித்து சகலமான விஷயத்தையும் ஆதியோடந்தமாக எடுத்துக் கூறிவிட்டேன். அந்த

சில வீடுகளில் நடக்கும் விஷயங்கள் எத்தனை நாளாயினும் வெளி வருவதே இல்லை. சில வீட்டிலோ ஒன்றுமில்லாத சிறு சங்கதிகள் எல்லாம் வேண்டுமென்றே சிலரால் வெளிக் கொண்டுவரப் படுகின்றன. இதனால் வரும் லாப மென்னவோ?

மனிதனைப் பற்றிய அங்க அடையாளங்களை எல்லாம் தெரிவித்தேன். இது விஷயமாக எத்தனை ஆயிரம் செலவாகிய போதிலும் உன்னைப்பற்றிய சகலமான விஷயங்களை நன்கு விளக்கி உன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டிக்கொண்டேன். அந்த மகானுபாவனும் தன்னால் கூடியவரையில் உழைத்து உன்னுடைய ஜீவிய ரகஸியத்தைக் கண்டு பிடிப்பதாயும், உனக்குத் தைரிய மொழிகள் கூறும்படியும், எந்தக் காலத்திலும் கடவுளை நம்பி ப்ரார்த்தனை செய்து கொண்டிருக்கும்படியாயும், தைரிய லக்ஷ்மியைக் கைவிடாதிருக்கும்படியும் உனக்குக் கூறித் தேற்றச் சொன்னார்.

என் காதல் கிளியே! இத்தனை ஏற்பாடுகள் நான் செய்திருக்கையில் உனக்கென்ன குறைவு? நமது காதல் விருக்ஷத்தில் கனி கண்டு புசிப்பதற்குள்—இன்பம் பெற்று ஆநந்திப்பதற்குள்—நீ ஆத்திரப்பட்டு வீணாக அந்த வ்ருக்ஷத்தைச் சேதித்து விடாதே! பச்சை மரத்தை வெட்டி விடாதே! கண்மணீ! உனக்கு நன்மை செய்வதே என்னுடைய ஜீவாதாரமான வேலை என்பதை மறக்காதே! இன்னொன்று முக்கியமாக நீ கவனிக்கவேண்டும்.

அதாவது உனக்கு திக்கா, திசையா! உன்னை எவ்விதம் செய்தாலும் கேள்வி முறை இல்லை என்று அவர்கள் எண்ணி இந்த பெரும் அபாண்டத்தை உன் தலையில் புரட்டி இருக்கிறார்கள். நான் இன்றே நாயுடுவினிடம் சென்று இதையும் தெரிவித்து விடுகிறேன். இச்சமயம் நீ தற்கொலை புரிந்து கொண்டால் என்னவாகும் தெரியுமா? "அவள் செய்த குற்றம் வெளியாகி விட்டதால் தற்கொலை செய்துகொண்டு விட்டாள்" என்கிற பழி நீ இறந்தும் உன்னை விடாது உலாவும். ஆகையினால் நீ கட்டாயம் பொறுமையை வகித்து என் பொருட்டு ஒன்றும் செய்வதில்லை என்று எனக்குச் சத்யம் செய்து கொடுக்கவேண்டும். இல்லையேல் நான் உனக்கு முன்பு உயிர் விட்டுவிடுவேன். உன்னை எப்பாடு பட்டேனும் நான் காப்பாற்றுகிறேன். அப்படி உன் குற்றம் விலகாது போய்விட்டதென்றால் உன்னோடு நானும் வருகிறேன். அந்த நிமிடத்தில் இருவரும் கைகோர்த்துக்கொண்டு கடலில் இறங்கிவிடலாம். இது சத்யம். சத்யம். என்ன யோசிக்கின்றாய்! என்னை நம்பமாட்டாயா! என் கண்ணார்மணியே! என் காதல் கரும்பே!

விவாகமாவதற்கு முன் யானைமேலிருந்து சுண்ணாம்பு கேட்பது போல வரனைத் தேடுவது. சரியான இடம் கிடைத்ததாக ஒரு வரனை நிச்சயம் செய்துப் பிறகு அது சொத்தல் என்று தெரிந்த நிமிடமே தாலி கட்டுவதற்குள் பெருத்த சண்டை சச்சரவு. "பெண்ணைச் சாக்கடையில் தள்ளினேனே!" என்பது பெண்ணின் தாயார். "பிள்ளைக்கு ஒரு குரங்கைக் கட்டினேனே!" என்பது பிள்ளையின் தாயார். தம்பதிகளின் வாழ்க்கை எவ்வித மிருக்கும்?

என்னை நம்பு. எனக்கு உறுதி கொடு." என்று மிகப் பரிதாபகரமாகக் கூறி திலகவதியின் மோவாயைப் பிடித்துக்கொண்டு கேட்டான்.

இது கேட்ட திலகவதிக்கு ஒன்றும்மே தோன்றவில்லை. ப்ரமை பிடித்தவள் போலாய்விட்டாள். தன் பொருட்டாகச் சுகுமாரன் செய்துள்ள ஏற்பாடுகளையும் ஆழமான—கரை காணாத—காதலையும் கண்டு உள்ளம் பூரிக்கின்றாள். சில நிமிட நேரம் யோசித்தாள். ஒரு விதமான முடிவுக்கு வந்தாள். சுகுமாரனின் இரு பாதங்களையும் பிடித்துக்கொண்டு "என் கண்ணாளா! நான் மும்மூர்த்களின்மீது சத்யமாகச் சொல்கிறேன் தாங்கள் கூறியபடியே செய்கிறேன். என்னுயிரையும் உடலையும் தமக்கே தத்தம் செய்துவிட்டதால் இனி இதை நான் தங்கள் உத்திரவின்றி மாய்த்துக்கொள்வதில்லை. அப்படி மிஞ்சிய சமயம் நேர்ந்தாலன்றி நான் தற்கொலை செய்துகொள்ள மாட்டேன். இதை உறுதியாக நம்பவும். தங்கள் இணையிலாத காதலுக்கு நான் பாத்திரமாக அருகதை யற்றவளாகவிருந்தும் தாங்கள் 'நீ அருகதையுள்ளவள்தான்' என்று கூறுவதால் நான் தங்கள் விருப்பப்படியே நடக்கிறேன்.

என் அன்பா! நான் வந்து வெகு நேரமாகிவிட்டது. இனி இங்கிருப்பது தகாது. நான் விடை பெற்றுக் கொள்கிறேன். கடவுள் எந்த வழி விடுகிறாரோ விடட்டும் நான் வரட்டுமா!" என்று கண்ணீர் பெருகக் கேட்டாள்

உடனே சுகுமாரன் அவளைத் தூக்கி நிறுத்திக் கட்டி யணைத்து பல முத்தாபரணங்களை அணிவித்து "என் இன்பக் கனியே! ஈடிலா மாணிக்கமே! தேடரியாப் பொக்கிஷமே! உன் வாக்குறுதியை இனி பிறழ மாட்டாயே! இது உண்மைதானே! எக் காலத்திற்கும் பயப்படாதே! தைரியமாயிரு. அவ்வப்போது எனக்கு விஷயத்தை நேரில் உரைக்க முடியாவிடினும் கடிதத்தில் எழுதி ஜன்னலில் போட்டு விடு. நான் தெரிந்து கொள்கிறேன். அதைரியப் படாதே!" என்று பல தைரிய மொழிகளைக் கூறித் தேற்றினான். கருத்தொருமித்த, கனிந்த காதலர்கள் பிரிவதென்றால் இலேசாக முடிகிறதா! அதிலும் இத்தகைய விசனகரமான நிலைமையில்—ஆபத்தான நிலைமையில்—பிரிவது எத்தகைய வேதனையாக விருக்கும்.

நேரமோ கடந்துவிட்டது. ஒருவரை யொருவர் பார்த்தபடியே பிரிந்தார்கள். சுகுமாரனின் கட்டில் அகப்பட்டுக்கொண்ட திலகவதி ப்ரயாசையுடன் பிரிந்து "நான் வருகிறேன் நமக்கு நற்காலமிருப்பின், நமது காதல் கனியாகப் புசிக்க ப்ராப்தமிருப்பின் மீண்

உண்மையான ஜோஸியரிடத்தில் தன்னம்பிக்கையற்றுத் தன் ஊழலை—உண்மையை—மறைக்கப் பார்த்தால் அது மறையுமா? பலாப் பழத்தை மடியில் வைத்து மறைத்தால் மணம் மறைவது போலத்தானாகும்.

டும் சந்திப்போம்." என்று கூறிக்கொண்டே திலகவதி அவ்வறையை விட்டுக் கிளம்பி வெளியில் வந்தாள். சுகுமாரனின் அளப்பரிய அன்பின் பூரிப்பு ஒரு புறம். அவனைப் பிரிந்த துயரம் ஒருபுறம். தனக்கு நேர்ந்துள்ள ஆபத்தின் பயங்கரம் ஒருபுறம். இனி தன் கதி யாதாகுமோ என்கிற பெருந் திகிலும் ஏக்கமும் ஒரு புறம் ஆக பலவிதமான உணர்ச்சிகளினால் உலப்பப்பட்டவள் மெல்ல யாரும் அறியாதவாறு தன் வீட்டையடைந்து, கொல்லைப்புறமுள்ள ஓர் இடத்தில் குப்புறப் படுத்தாள்.

இன்னது செய்வதென்று தோன்றாது குழப்பத்தில் ஆழ்ந்துவிட்டாள். கண்ணீரோ ஆறாய் ஓடுகின்றது. கடவுளைப்பிரார்த்தித்துக்கொண்டே இருக்கிறாள். அச்சமயம் கணபதி குற்றலான பார்வையுடனும் கோபக்குறியுடனும் அவ்விடம் வந்து திலகவதியை நோக்கி, "ஐயோ பாவம்! இத்தனை நேரம் கள்ளப் புருஷனுடன் சம்பாஷித்து மகிழ்ந்த சிரமப் பரிகாரத்திற்கு ஏற்ற இடம் இதுவல்லவே! அதற்கு வேறு இடம் உனக்கு சர்க்காரில் கட்டி வைத்திருக்கிறார்கள். உன் கள்ளத்தனத்தை நான் கவனிக்கவில்லை என்று எண்ணி மனப்பால் குடிக்காதே! இனிமேல் உன் கள்ளத்தனத்தை ஒளிக்க முடியாது. பத்திரம். உன் சூதும் வாதும் நாளைக் காலைக்குள் வெட்டவெளி யாகிவிடும். இப்போதேனும் உண்மையை ஒப்புக்கொள்ளுகிறாயா இல்லையா!" என்று அதட்டிக் கேட்டான்.

இவ்விதம் நடக்கும் என்பது திலகவதிக்குத்தெரிந்தவிஷயமேயாதலால் சற்று தைரியமாகவே பேசத்தொடங்கி "மாமா! தாங்கள் நினைக்கின்றபடி கள்ளத்தனமாக நான் ஏதும் செய்யவில்லை. என்னைப் படைத்த பரமனின் முன்னிலையில் அவன் ஆணைப்படிக்கு நான் மனதார வரித்த கணவனுடன்தான் நான் பேசினேன் என்பதை தைரியமாகக் கூறுகிறேன். இதை இனி எந்த இந்திரன் சந்திரனாலும் மாற்ற முடியாது. இது நினைவிருக்கட்டும். உங்கள் வார்த்தைக்குப் பயந்து நான் பொய்யுரைக்கத் தயாராக இல்லை. நான் நிரபராதி; குற்றமற்றவள் என்பதை என்னுயிர் போகும் வரையிலும் அதையேதான் கூறுவேன்." என்று சற்று கோபமாயும், அழுத்தமாயும் கூறினாள்.

இந்த புதிய சொல்லைக் கேட்ட கணபதி உடனே முக்கண் மூர்த்தியாகிவிட்டான். "என்ன! என்ன! உன் கணவனா! நீ வரித்தவனா! ஓகோ! அப்படியும் ஒரு நியாயம் கற்றுள்ளாயோ? பலே!

எக்காரியத்தையும் ஆராய்ந்து செய்யவேண்டும் என்று பிறருக்குப் போதிப்பவர்களே தம் கைப் பணத்தைத் திரும்பி வராத விடத்தில் கொடுத்துவிட்டுத் திகைப்பது. அதற்கு யார் சொல்வது?

210042

திலகவதி! நீ இப்போது என்ன பேசினுய். என்ன எண்ணியிருக்கிருய். யார் கைவசமிருக்கிருய். என்பதை மறந்துவிட்டாய் போலவிருக்கிறது. நன்ருக நினைப்பூட்டிக் கொண்டு யோசனை செய்து உன்னுடைய நிலைமையை நன்ருகத் தெரிந்து கொள்ளு. கணபதி என்ருல் யானை என்பது நினைப்பிருக்கட்டும். யானையின் கறுவு வீணுகாது.'' என்று திட்டிக் கொண்டிருக்கையில் கணபதியை வீதியில் யாரோ கூப்பிட்டார்கள். ஆதலால் அவசரமாகப் போய்விட்டான். திலகவதியின் கதி எவ்வாறிருக்கும்.

மறுநாள் காலையில் கணபதியின் வீட்டு வாசலில் போலீஸார் வெகு அட்டகாஸமாய் தடபுடலாகத் வந்து விட்டார்கள். கணபதி, கணபதிக்குப் பணம் கொடுத்த பேர்வழிகள் இன்னும் சிலர் ஆக எல்லோரும் வீதியில் கூடிப் பேசிக்கொண்டு உள்ளே நுழைந்தார்கள். கணபதி, திலகவதியின் பெட்டியில் இருந்த சேலை முதலியவற்றைக் காட்டிச் சகலத்தையும் கூறிப் பின்னர் திலகவதி! திலகவதி!'' என்று அழைத்தான். போலீஸாரும் அழைத்தார்கள்.

பதில் இல்லை. அங்கச்சியம்மாள் உள்பட எல்லோரும் வீடு பூராவும் தேடினர்கள். திலகவதி அவ் வீட்டில் எங்கும் காணப்படவில்லை. ஒரு இடம் பாக்கி இன்றித் தேடியும் காணுமையைக் கண்டு கணபதி முதல் எல்லோரும் ''ஆ! மோசம். மோசம். எப்படியோ வீட்டை விட்டு ஓடிவிட்டாள். தப்பித்துத் கொள்ள ஓடிவிட்டாள்.'' என்ற பெரும் குழப்பமும், வியப்பும், திகைப்பும்;கொண்டு திடுக்கிட்டு விட்டார்கள். அங்கச்சியம்மாள் அத்தனை பேர்களின் முன்பு சற்றும் லஜ்ஜையற்று ''நாதா! நான் நேற்றே சொன்னேனே! அவளை இன்று ஓர் தனி யறையில் பூட்டி வைக்கலாம் என்றேனே! என் வார்த்தையை அலக்ஷியம் செய்து விட்டீர்களே! அந்தச் சண்டாளி தப்பித்துக்கொண்டு நம் தலையில் பாறையைப் புரட்டிவிட்டு ஓடி விட்டாளே! என்ன செய்வது? ஐயோ! அம்மாடி! என் குடிக்கு அனர்த்தத்தை விளைவிக்கவா ஒரு பாவியை வளர்த்தேன்!'' என்று சக்கார், சக்கார் என்று அடித்துக்கொண்டு ஒப்பாரி வைக்கிருள். ''நமக்கும் உபயோகமின்றி, பலிக்கும் அகப்படாமல் எப்படியோ தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டாளே! ஐயையோ! என்ன செய்வது?'' என்று சோருவும் இடிந்து விட்டான். போலீஸார் தமக்குக் கிடைக்கவிருந்த நல்ல வேட்டைக்குப் பங்கம் வந்து விட்டதே! என்று திகைத்து நின்று விட்டார்கள்.

வாக்கு நாணயமற்றவர்களிடம் மற்றவர்கள் மட்டும் நாணயமாயிருந்தால் அது ஓர் நாற்றக் குப்பையில் வைத்த ரோஜா எப்படி சோபிக்காதோ அப்படியே முடியும். குப்பையுடன் குப்பையைக் கொட்டுவதுதா காரியவாதிகளின் சாமார்த்யமாகும். சோதாக்களுக்குச் சோதாவாகவே இருந்தால்தான் வேலை முடியும். திருடனைப் பிடிக்கத்திருடன் போல நடிக்கவேண்டு மல்லவா?

ஒரு அரிய சந்தர்ப்பம்!

இனி ஸ்திரீகளும் இன்ஷியூர் செய்யலாம்.

தற்போது நமது தேசம் மாறுபட்டுள்ள நிலைமையில், முன்னை விட அதிகமான ஸ்திரீகள் தங்கள் ஆயுளை இன்ஷியூர் செய்ய வேண்டியதின் அவசியத்தையும், அதற்கு வேண்டிய வசதிகள் அளிக்க முடியுமென்பதையும் கருதி,

யுனைடெட் இந்தியா அஷியூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

சில நிபந்தனைகளுக் குட்பட்டு, ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ்களை இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கின்றது.

ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ் சம்மந்தமான முழு விவரங்களும் தங்கள் கடிதம் கண்டவுடன் அனுப்பப்படும்.

படித்த ஸ்திரீகளிடமிருந்து இந்த கம்பெனியின் ஏஜண்டு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தக் கம்பெனியின் ஏஜண்டாக இருப்பதால், நமது ஜன சமூகத்திற்குத் தொண்டு புரியவும், ஒரு நிரந்தரமான வருமானம் அடையவும் சந்தர்ப்பம் வாய்க்கின்றதென்பதைக் கவனியுங்கள்.

"யுனைடெட் இந்தியா"
கட்டடம்
செம்புதாஸ் தெரு,
சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ., பி. எல்.,
மானேஜிங் டைரேக்டர்.

Jaganmohini (MAY 1933). Regd. No. M. 2210

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்



குளிர்காய்ச்சல், பரு, இருமல், சுண்டு, உடைவு, தலைவலி, காயம், தாடை வலி, முழங்கால் சுளுக்கு, இடுப்பு வலி, கட்டி, நரம்பு நோய், பாரிச வாயு, கீல் வாயு, புண், பல் வலி, ரணம், கக்குவாய் இருமல் முதலியவைகளுக்கும், இன்னும் பலவித நோய்களுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம்

அமிர்தாஞ்சன் டிபோ

சென்னை கல்கத்தா பம்பாய்